# சர்வவியாபி

SARVAVIABI

MISSION PRESS 1840

| 06-08-2017 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | ஹேவிளம்பி வருடம் ஆடி 21 | வருட சந்தா ₹ 150<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 111<br>பக்கம் - 12 | இதழ் 30 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |
|---|---|---|---|---|


## இயேசுவை அடைய, ஆர்வமும் தியாகமும் தேவை



நிலத்தில் புதைந்திருக்கும் புதையல், மற்றும், விலைமதிப்பற்ற முத்து பற்றிய இயேசுவின் உவமைகள், உலகாயுதப் பொருட்களைத் தியாகம் செய்து, இயேசுவை தேடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன என இஞ்ஞாயிறு மூவேளை செப உரையின்போது எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இஞ்ஞாயிறு திருப்பலி வாசகம் தந்த, இயேசுவின் உவமைகள் குறித்து தன் மூவேளை செப உரையில் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு பொருளை தேடுவதில் இருக்கும் ஈடுபாடே, அது கிடைப்பதற்கான முன்நிபந்தனையாக இருக்கிறது என்றார். விலைமதிப்பற்ற ஒரு பொருளை அடைய வேண்டுமெனில், அதன் மீது நாம் கொள்ளும் தீவிர விருப்பத்தால் நம் இதயம் பற்றியெரிய வேண்டும் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். இயேசுவில் குடிகொண்டிருக்கும் இறையரசை நாம் தேடிச்செல்ல வேண்டும், இங்கு இயேசுவே புதையலும் விலைமதிப்பற்ற முத்துமாவார் எனவும், தன் மூவேளை செப உரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை. இயேசு எனும் விலைமதிப்பற்ற முத்தை நாம் கண்டுகொண்டபின், அதற்காக நம் உலகாதாய இன்பங்களை விட்டுக்கொடுக்க நாம் தாயாராக இருக்கவேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவைத் தவிர மற்றவை அனைத்தையும் புறந்தள்ள வேண்டும் என இவ்வுவமைகள் கூறவில்லை, மாறாக, இயேசுவுக்கு வாழ்வில் முதலிடம் கொடுப்பதையே வலியுறுத்துகின்றன எனவும் கூறினார்.

புதையலை கண்டுகொண்ட விவசாயியின் மகிழ்ச்சியையும், விலைமதிப்பற்ற முத்தைக் கண்டுபிடித்த வணிகரின் மகிழ்ச்சியையும் குறித்துப் படிக்கும் நாம், ஆறுதல் தரும் இயேசுவின் நெருக்கத்தை கண்டுகொண்டு, அதனால் இதயங்களில் மாற்றம் பெற்று, மற்றவர்களின் தேவைகள் குறித்து நம் மனங்கள் திறந்தவர்களாகச் செயல்படுவோமாக என உரைத்தார். இறையரசை அடைய வேண்டுமெனில் அதைத் தேடுவதற்கான ஏக்கமும், அதற்காக எதையும் தியாகம் செய்யும் மனப்பான்மையும் முக்கிய மானவை என்பதை, தன் மூவேளைசெப உரையில் வலியுறுத்தினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

**ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளாக மாறிவருகின்றன, தீமைகள்**

மனிதர்களை வியாபாரப்பொருள்களாக கடத்தும் அவல நிலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்கவும், இத்தகைய கடத்தல்களில் ஈடுபடுவோர் மனம் திருந்தவும் செபிக்குமாறு அழைப்புவிடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ். மனிதர்களை வியாபாரப் பொருட்களாக கடத்தப்படுவதற்கு எதிரான நாள் இஞ்ஞாயிறன்று சிறப்பிக்கப்பட்டதைக் குறித்து, தன் ஞாயிறு மூவேளை செப உரைக்குப்பின் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மிகவும் மோசமான, கொடூரமான மற்றும் தண்டிக்கத்தக்க குற்றமான இந்நோய் குறித்து உலகம் அதிகக் கவலைப்படாமல் இருப்பதை சுட்டிக்காட்டி, தன் கவலையை வெளியிட்டார். ஒவ்வோர் ஆண்டும், பல ஆயிரக்கணக்கான அப்பாவி ஆண்களும் பெண்களும் குழந்தைகளும், அடிமைத் தொழில், பாலியல், உறுப்புத்திருட்டு ஆகிய கொடுமைகளுக்காகக் கடத்தப்படுகிறார்கள் என்று கூறியத் திருத்தந்தை, இவற்றை சாதாரண நிகழ்வுகளாக ஏற்றுக்கொண்டு இவ்வுலகம் செயல்படுவது, மிகவும் கவலை தருவதாக உள்ளது என்றார். இத்தகைய நிலைகளால் பாதிக்கப்பட்டோர் விடுதலை பெறவும், கடத்தல்களில் ஈடுபடுவோர் மனம் மாறவும் அன்னை மரியை நோக்கி அனைவரும் செபிப்போம் என்ற அழைப்பை முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தூய பேதுரு வளாகத்தில் குழுமியிருந்த மக்களோடு இணைந்து, இக்கருத்துக்காக, 'அருள் நிறை மரியே' என்ற செபத்தைச் செபித்தார்.●

**புனித நிக்கோலாசின் திருப்பண்டங்கள், இத்தாலி திரும்பின:** இரண்டு மாதங்களாக இரஷ்யாவில் பயணம் மேற்கொண்டிருந்த புனித நிக்கோலாஸ் அவர்களின் திருப்பண்டங்கள், கடந்த வார இறுதியில் இத்தாலியின் பாரி நகர் திரும்பின. 1087ம் ஆண்டிலிருந்து இத்தாலியின் பாரி நகரில் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்த, துருக்கியின் (Myra) மிரா நகரைச் சேர்ந்த புனித நிக்கோலாஸ் அவர்களின் திருப்பண்டங்கள், இவ்வாண்டு மே மாதம் 21 ம் தேதி இரஷ்யாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன. கத்தோலிக்கர்கள், ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ சபையினர், பிரிந்த கிறிஸ்தவ சபையினர் என ஏழத்தாழ அனைத்துக் கிறிஸ்தவர்களாலும் மதிக்கப்படும் புனித நிக்கோலாஸ் அவர்களின் திருப்பண்டங்களை, கடந்த இரண்டு மாதங்களில் 20 இலட்சத்துக்கு மேற்பட்ட இரஷ்ய ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்கள் பார்வையிட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏழைக்குடும்பங்களுக்கு உதவுவதையே தன் பணியாகக் கொண்டிருந்த புனித நிக்கோலாஸ் அவர்களை மனதில் கொண்டே, கிறிஸ்துமஸ் தாத்தா, அதாவது, 'சான்டா கிளாஸ்' என்ற கற்பனை உருவம் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இரு மாதங்கள் இரஷ்யாவில் பயணம் செய்த இத்திருப்பண்டங்களை, இத்தாலியின் பாரி நகருக்குக் கொண்டு வருவதற்கு சென்ற,கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பீட அவையின் தலைவர், கர்தினால் Kurt Koch அவர்களும், பாரியின் பேராயர் Francesco Cacucci அவர்களும், கடந்த வெள்ளியன்று, ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்களுடன் இணைந்து இத்திருப்பண்டங்கள் முன்பு செபித்ததுடன், அவற்றை பாரி நகருக்குக் கொணர்ந்தனர்.

ஆசிரியர் பேனா...

# சுமைதாங்கிகளாகும் சாமானியர்கள்

அண்மையில் மத்திய அரசு வெளியிட்டுள்ள, சமையல் எரிவாயு மானியம் ரத்து நடவடிக்கை சாமானியர்களையும், நடுத்தர வர்க்கத்தையும் ஏழைகளையும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

**கடந்த நவம்பர் 8, 2016-இல் ரூ.500, ரூ. 1000/--** செல்லாது என அறிவிக்கப்பட்டது, பொருளாதார சீர்திருத்த நடவடிக்கை மற்றும் கருப்புப் பணக் கட்டுப்பாடு ஆகிய இலக்குகளைக் கொண்டிருந்தாலும் நடுத்தர மற்றும் அடித்தட்டு வர்க்கத்தினரை வெகுவாகவே பாதித்துவிட்டது உண்மை. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக சிறிதளவு வலியையும் சங்கடங்களையும் மக்கள் பொறுத்துக் கொள் வார்கள் என சொல்லி வந்தார்கள்; மக்களும் சகித்துக் கொண்டார்கள். நவம்பர் 8, 2016 தொடங்கி டிசம்பர் 31, 2016 வரை தினம் ஒரு அறிக்கையிட்டு அரசு பொதுமக்களை திணரடித்தது. 100 க்கும் அதிகமானோர் இதில் இறந்து போனார்கள். எவரும் இதை கண்டுகொள்ளவில்லை.

**பல வருடங்களாக ஜி.எஸ்.டி பற்றி பேச்சுகள்** எழுவதும், வீழ்வதுமாக இருந்து. கடந்த ஜுலை 1 முதல் நாடு முழுவதும் - ஒரு நாடு ஒரு வரி - கொள்கையில், ஜுன் 30 நள்ளிரவு பார்லிமெண்ட் நடுமன்றத்தில் இரண்டாம் சுதந்திரம் என்ற கணிப்பில் விழாக் கொண்டாடி GST வரியை அமுல்படுத்தியது மத்திய அரசு அமுல்படுத்தியது. முன்னதாக அந்தந்த மாநிலங்கள் GST அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியது. கடைசி நுகர்வோர்தான் வரியை கட்ட வேண்டும் என்றும் அர்த்தப்படுத்தப்பட்டது. விலைவாசி குறையும், ஆனால் அதற்கு முன் சிறிது விலைவாசி உயர்ந்து, பின் படிப்படியாகக் குறையும் என்றெல்லாம் மக்களுக்கு நம்பிக்கையூட்டப் பட்டது. இன்றுவரை விலைவாசி குறையவுமில்லை. வரிச்சுமைகள் அதிகமாவதோடு, சிறு தொழில் மற்றும் நடுத்தர தொழில்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மும்பை மாநகரில் மட்டும் சுமார் 3 இலட்சம் சிறு தொழில், மற்றும் மிகச்சிறு தொழில் முனையங்கள் முடக்கப்பட்டு விட்டதாக ஒரு தன்னார்வ புள்ளியியல் குழு தெரிவிக்கிறது. இதே நிலை தொடருமானால் GDP எனப்படுகின்ற மொத்த உள்நாட்டு உற்பத்தி குறையும் என்று பொருளாதார நிபுணர்கள் அஞ்சுகின்றனர். பெரும் தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் அத்தியாவசியமான உதிரி பாகங்கள் மற்றும் பொருட்களை தரவு செய்யும் சிறு மற்றும் இடைநிலை தொழிற்சாலைகள் மூடப்படும் அவலத்தை நாடு சந்திக்கக் கூடும் என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**இத்தகைய இக்கட்டான சூழலில்,** சமையல் காஸ் மானியம், அடுத்த ஆண்டு மார்ச்சுக்குள் முழுவதுமாக நிறுத்தப்படும் என்றும், அதுவரை படிப்படியாக மாதம் தோறும் நான்கு ரூபாய் உயர்த்திக்கொள்ளவும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு அரசு அனுமதி அளித்திருப்பது மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் கிராமங்களில் கூட சமையல் வாயு உருளை மற்றும் கேஸ் அடுப்பு ஏழை வர்க்கத்தினர் (சிவப்பு அட்டை வைத்திருப்பவர்) களுக்கு அரசு இலவசமாக அளித்தது; கேஸ் அடுப்புகள் பயன்படுத்துவதை ஊக்கு வித்தது. சென்ற ஆண்டு நமது பிரதமரின் ஆலோசனையை ஏற்று மேல்தட்டு, இடைத்தட்டு மக்களில் பலர் கேஸ் மானியத்தை திரும்ப அளித்துள்ளனர். உலக சந்தையில் கச்சா எண்ணை மிகக் குறைந்திருப்பினும், முன்பு விற்ற விலைக்கே பெட்ரோல் மற்றும் டீசல், விற்கப்படுகிறது. பெட்ரோலியப் பொருட்கள் அரசால் GST வலைக்குள் கொண்டு வராமல் விடப்பட்டது. தினமும் குறைந்தபட்சம் 40 கி.மீ. இருசக்கர வாகனத்தில் பயணித்து பணி செய்பவர்கள்தான் இந்த வரிச்சுமையை சுமக்கிறார்கள். பெட்ரோல் பங்கு உரிமையாளர்கள் மற்றும் ஏஜெண்டுகள் வரியை அடுத்து வாங்குபவரிடம் சுலபமாக தள்ளி விடுகிறார்கள். சாமானியர்களும் நடுத்தர வர்க்கத் தினரும்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். இதே நிலைதான் காஸ் சிலிண்டர் பயன்பாட்டாளர்களுக்கும் நேரப்போகிறது.

**மத்திய அரசு முறைப்படி காஸ் சிலிண்டரின்** மானியத்தை முற்றிலும் ரத்து செய்யும் நடவடிக்கைகள் தொடங்கப் போகிறது. சிலிண்டர் விலை 5.57 ரூபாய் உயர்த்தியும், மானியமில்லாமல் வழங்கப்படும் சிலிண்டர் விலை ரூ. 14.50 ரூபாய் குறைத்தும் மத்திய அரசு அறிவித்துள்ளது. 14.2 கிலோ சிலிண்டர், மக்களுக்கு மானியத்துடன் வழங்கப் படுகிறது. இது ரூ. 440.50 க்கு கிடைக்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது. மானியத்தை மாதத்துக்கு ரூ.4 வீதம் குறைத்து அடுத்த ஆண்டு மார்ச்சுக்குள் முழுதும் நீக்கப்படும். இதுமட்டுமல்ல, ரேஷன் பொருள் ரத்து: மாத வருமானம் ரூ. 8,300க்கு அதிகமிருந்தால் (அ) 3 படுக்கை அறை கொண்ட வீடு,பிரிட்ஜ், கார், எ.சி. இருந்தால் இனி ரேஷன் பொருள் கிடையாது. இந்த லிஸ்ட் இன்னும் நீண்டு கொண்டே போகிறது. யாருக்குத்தான் கிடைக்கும் என்பதை கணிப்பதற் குள் தலைசுற்றுகிறது. தமிழக அரசு இதனால் பாதிப்பில்லாமல் பார்த்துக்கொள்ளப்படும் என்று கூறி வந்தாலும், மத்திய அரசை மீறிச் செய்வது இப்போது இயலும் காரியம் அல்ல.

**மொத்தத்தில்** காஸ் சிலிண்டர்கள் பயன்பாடு சாமானியர் களுக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் எட்டாக் கனியாகும் நாள் வெகு தொலைவில் இல்லை. பழையபடி விறகுக்கும், மண்ணெண்ணைக்கும் அலைய வேண்டிய நிலையை இவர்கள் சந்திப்பார்கள். பொருளாதார படிநிலையில் சிறு சிறு வசதிகளை சம்பாதித்து நிம்மதியாக இருந்த நடுத்தர வர்க்கத்தினரும், சாமானியர்களும் இனி அன்றாடம் போராடும் குழுவாகத்தான் இருப்பார்கள். இவர்களே இன்றைய சுமைதாங்கிகள்!? ●

✦ **இலங்கைப் பெண்மணிக்கு 2017 ரமோன் மகசேசே விருது:** இந்தோனேசியாவில் பழங்குடியினரிடையே பணி யாற்றியவர், இலங்கை உள்நாட்டுப் போரினால் பாதிக்கப் பட்டோருக்கென உழைக்கும் பெண்மணி, கம்போடியாவின் Angkor Wat நினைவுச் சின்னத்தைப் பாதுகாக்க உழைக்கும் ஒரு ஜப்பான் நாட்டவர் உட்பட, ஆறுபேருக்கு இவ்வாண்டின் ரமோன் மகசேசே விருது அறிவிக்கப் பட்டுள்ளது என்று UCA செய்திக்குறிப்பொன்று கூறுகிறது.

ஆசியாவின் நொபெல் விருது என்று வழங்கப்படும் மகசேசே விருதினைப் பெறுவதற்கு, இந்தோனேசியாவின் Abdon Nababan, இலங்கையின் Shanmugam, ஜப்பான் நாட்டு Yoshiaki Ishizawa, சிங்கப்பூரைச் சேர்ந்த Tony Tay, பிலிப்பின்ஸ் நாட்டைச் சேர்ந்த Lilia de Lima என்ற பெண்மணி, மற்றும் அந்நாட்டின் கல்வி சார்ந்த நாடகக் கழகத்தைச் சார்ந்தோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆசிய நாடுகளில் தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டு சமுதாய மாற்றங்களைக் கொணர் வோருக்கென, பிலிப்பின்ஸ் முன்னாள் அரசுத்தலைவர் ரமோன் மகசேசே அவர்களின் நினைவாக, இவ்விருது 1957 ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் 31ம் தேதி, மணிலாவில் நடைபெறும் ஒரு விழாவில், இந்த விருது வழங்கப்படும். இதுவரை இவ்விருதை, 318 பேர் பெற்றுள்ளனர் என்பதும்,கடந்த ஆண்டு வழங்கப்பட்ட ரமோன் மகசேசே விருதைப்பெற்ற Bezwada Wilson என்ற இந்தியர் தலித் கிறிஸ்தவர் என்பதும், இவர் மனிதக் கழிவை மனிதர்களே அகற்றும் கொடுமைக்கு எதிராகப் போராடி வருபவர் என்பதும் குறிப்பிடத்க்கன. -UCAN.

வாரச் சிந்தனை

ஆண்டின் பொதுக்காலம் 19 ஆம் ஞாயிறு (13-08-2017) 1அரசர்.19:9a,11-13a உரோமை.9:1-5 மத்.14:22-33

# மெல்லிய காற்றிலும், மிரட்டும் புயலிலும் இறைவனை காண

அருள்திரு. D. அலெக்சாண்டர்,
உதவி பங்குதந்தை, இறையூர்.

**இ**றைவனைக் காண இயற்கையே போதும். இயற்கையின் படைப்பே அவரது சிறப்பு. இவ்வுலகும், அண்ட சராசரங்களும், இயற்கையின் நியதிகளும் அவருக்கு கட்டுப்பட்டவை. இறைவனின் பிரசன்னம் இயற்கையிலும் அயலாரிலும் நம்மோடு இருக்கிறது. இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் இறைவன் பேணுகிறார். மனிதனின் ஒத்துழைப்பு இயற்கையை மேம்படுத்தும். மனிதன் அத்துமீறினால் இயற்கை அத்து மீறுகிறது.

**கடவுள் எங்கே இருக்கிறார்? (நிகழ்வு):** குறும்புக்கார அண்ணனும் தம்பியும் இருந்தனர். எப்போதும் துருதுரு வென்று அவர்கள் இருப்பது அனைவருக்கும் தெரியும். அதோடு அவர்கள் யாருக்கும் தெரியாமல் பிறர் பொருளை எடுத்துக் கொள்வதும் உண்டு. வீட்டில் ஒரு பொருளை காணவில்லை என்றால் உடனே அம்மாவுக்கு தெரியும் எந்த மகன் எடுத்திருப்பான் என்பது. அதுமட்டுமல்ல பக்கத்து வீட்டார் கூட அவர்கள் வீட்டில் பொருட்கள் களவு போனால் நேராக இவர்கள் வீட்டுக்கு வந்து அந்த அண்ணன் தம்பியை கேட்பதுண்டு. இவர்களின் கெட்ட பழக்கம் அம்மாவுக்கு வருத்தம் அளித்தது. எனவே குழந்தைகளை திருத்துவதில் வல்லவரான தனது பங்கு தந்தையிடம் மகன்களை அழைத்து வந்தார்.

குருவானவரும் தனிதனியாக அவர்களை சந்திக்க அழைத்தார். முதலில் தம்பியை குருவின் அறைக்குள்ளே அனுப்பினார் தாய். சிறுவனைப் பார்த்து குருவானவர் கேட்டார் "கடவுள் எங்கே இருக்கிறார்?" சிறுவன் செய்த தவறு கடவுளுக்கு தெரியும், ஏனெனில் கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிறார். இதை உணர்ந்து சிறுவன் தவற்றை ஒப்புக் கொள்வான் என்று நினைத்தார். சிறுவன் முழித்தான். மீண்டும் கேட்டார் "கடவுள் எங்கே இருக்கிறார்? சொல்." பதில் இன்றி முழித்தான் மீண்டும். "எங்கே இருக்கிறார் கடவுள்?" என்று குரலை உயர்த்தி கேட்டார். சிறுவன் பயந்து நாற்காலியில் இருந்து எழுந்து ஒரே ஓட்டமாக வெளியே வந்து அண்ணனிடம் "அண்ணா பெரிய வம்பில் மாட்டிக் கொண்டோம். கடவுளை யாரோ திருடிட்டாங்க, சாமியார் நமது மேல சந்தேகப்பட்டு 'கடவுள் எங்க இருக்கிறார்' என்று கேட்கிறார். நமக்கு தெரியாது என்று சொல்லிவிடு என்றான்.

பல நேரங்களில் நாம் கூட கடவுள் எங்கே இருக்கிறார் என்பது தெரியாமல் இருக்கிறோம். கடவுள் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்.

**இயற்கையில் நம்மோடு கடவுள்:** ஆண்டவரது பிரசன்னம் எப்போதும் நம்மோடு கூடவே இருக்கிறது. நம்மைச் சுற்றிலும் உள்ள இயற்கை அதை நமக்கு உணர்த்துகிறது. முதல் வாசகத்தில் எலியா ஒரேபு மலையில் கடவுளைச் சந்திக்கிறார். சுழல் காற்றிலோ, நிலநடுக்கத்திலோ, தீயிலோ கடவுள் இல்லை. மாறாக அடக்கமான மெல்லிய ஒலியில் கடவுள் எலியாவைச் சந்தித்தார். இன்றைய நற்செய்தி வாசகத்தில் சீடர்கள் பெருங்காற்றில் கடலில் சிக்கிக் கொள்கின்றார்கள். அங்கே கடல் மீது இயேசு நடந்து வந்து அவர்களைத் தேற்றுகிறார். கடலையும், புயலையும் வெற்றி கொள்கிறார். இயற்கை நியதிகளை ஆள்பவர் ஆண்டவர். அவரது சொல்லுக்கு புயலும், நெருப்பும், கடலும், மழையும், நிலமும், அண்ட சராசரங்கள் யாவும் அடிபணிய வேண்டும். ஏனென்றால் அனைத்தையும் ஆள்பவர் அவரே.

**அஞ்சாதீர்கள் நான்தான்:** ஆண்டவர் இயேசு சீடர்கள் அஞ்சி நடுங்குவதைப் பார்த்து அவர்களைத் தேற்றுகிறார். இயற்கையின் சீற்றங்கள் வாட்டும்போது இயேசுவே நமக்குத் துணையாக இருக்கிறார். அவர் இருக்கிறார் நம்மைக் காப்பாற்றி வழி நடத்த.

மனிதன் அனைத்தையும் பார்த்து பயம் கொள்கிறான். அதனால் விசுவாசத்தில் பல நேரங்களில் விழுந்து விடுகிறான். உலக துன்பங்களையும், இயற்கையின் வலிமையையும் பார்த்து பயம் கொள்கிறான். ஆண்டவர் இந்த சக்திகளையெல்லாம் அடக்க வல்லவர் என்பதை மறந்து விடுகிறான். அதனால்தான் இயேசு அந்த கடலின் மீது நடந்து, காற்றையும் அடக்கி அவரது சீடர்கள் மீது அன்பை வெளிப்படுத்துகிறார். அவர்களைக் காப்பாற்றுகிறார். ஆண்டவரின் வலிமைக்கு இயற்கை அடிபணிய வேண்டும். அவரது துணை இருக்கும் போது நாம் அஞ்சவேண்டியதில்லை. இதை நாம் ஆழ்மனதில் பதிய வைக்க வேண்டும்.

**ஐயம் தவிர்த்து, நம்புவோம்:** ஆண்டவர் மீது ஆழ்ந்த விசுவாசம் இருக்கும்போது நாம் துணிச்சலோடு செயலாற்ற முடியும். அவர்மீது நம்பிக்கை இருக்கும்போது எதையும் கண்டு நாம் பயப்பட வேண்டியதில்லை. எனவே இயற்கையை பாதுகாப்போம், இயற்கையில் கடவுளை காண்போம். அவரையே நம்பி, துணிந்து மகிழ்ந்து எதிர்வரும் காலத்தை இன்பமாய் வாழ்வோம். ●

---

## ஒரே வழி

- திரு. நல்போன் சூசைநாதன் (அசோக்), France.

சென்ற இதழ் தொடர்ச்சி..

**ம**றுபடியும் புதிதாக எழுத ஆரம்பித்தார்கள். இவரைக் கூப்பிட்டு அவர் தம்பி குடும்பத்தைக் கூப்பிடாவிட்டால் இவர் வர மாட்டார். இவர்களை பிடிக்காது என்று கண்டபடி பேசி முடித்தது. முடிவாக கரோலின் ஆசைப்படி அவள் போக்கில் விட்டு புது திசையில் யோசித்து மொத்தம் எத்தனைப்பேர் என ஆவலாக எண்ணும்போது 82 என வந்ததை திரும்ப திரும்ப கூட்டிப் பார்த்தார்கள். கரோலினுக்கு கண் சிவந்துவிட்டது. ஞானம் தனியாகப்போய் அழுதுவிட்டு வந்தாள். எங்களை மதித்து இந்த ஊரில் எத்தனையோ பேர் அவர்களின் இல்லத்தில் நடக்கும் சடங்குகளுக்கு அழைத்திருக்கின்றார்கள். அவர்களை நான் என் மகளின் திருமணத்துக்கு அழைக்காவிட்டால் நாளை அவர்கள் முகத்தில் எப்படி முழிப்பேன் என ஆரோக்கியம் கவலையாக சொன்னார்.

பிரான்சில் திருமணம் செய்து வாழும் வாழ்க்கை அரிதாகிக்கொண்டு வரும் நிலையில் இந்த மாதிரியான பிரச்சனைகள் வீட்டுக்கு வீடு நடப்பதுதான். சொந்தங்களும் தேவை, செலவையும் பார்க்கவேண்டும். இதே நேரம் யாரும் கோபிக்காத மாதிரி அந்த பெரிய முக்கோணத்தில் நிறைய கேள்விக் குறிகள்.

ஆரோக்கியம் சார்தான் மாடலுக்கு வந்த ஒரு திருமண வீடியோவை அனைவரும் பார்க்க அழைத்தார். மணமகள் மணமகன் மேக்கப் என ஆரம்பித்து அலங்காரம் செய்த ஒரு வீட்டிலிருந்து மணமகள் புறப்பட்டு வீதிக்கு வந்தது முதல் அவர்களை துரத்திய கார்கள் என எங்குபார்த்தாலும் ஒரே கூட்டம். நகர சபையில் அரசாங்க திருமண அத்தாட்சியோடு வெளியே வரும் மணமக்களை வாழ்த்தும் கூட்டம் என சொந்தங்கள் தெரிந்தவர்கள் நண்பர்கள் என எங்கு திரும்பினாலும் அன்பு உள்ளங்கள்.. கோவிலில் ஞானக தந்தை தமிழில் செபம் சொல்லி தாலி எடுத்துக் கொடுக்கிறார். ஒரே கை தட்டல்கள், அங்கிருந்து பலூன்கள் பறக்க ஆரம்பித்து காதை கிழிக்க ஆரன் அடித்துக் கொண்டு மண்டபம் போகின்றார்கள். ஒரே சந்தோஷம். மண்டப வாசலில் இளம் சொந்தங்கள் நண்பர்கள் டான்சு ஆடுகின்றார்கள். மணமக்களின் ஆனந்தக் கண்ணீர் கரோலினுக்கு பழக்கம் இல்லாத அந்த பெண்ணின் முகத்தை பார்க்கின்றாள். அதில் என்ன கொட்டிக் கொடுத்தாலும் கிடைக்காத நிம்மதி தெரிந்தது. வாழ உறவு தேவை. இந்த பாக்கியம் அதன்பின் கிடைக்குமா? எனக்கு ஏன் இந்த குணம் வந்தது என்று அழுதாள். நல்ல உள்ளங்கள் தேவை. அந்தப் பெண்ணின் ஆனந்தக் கண்ணீர். இந்த பிறவி போதும் இதைவிட எனக்கு என்ன சந்தோஷம் வேண்டும் என மனம் மாறினாள். வீடியோ ஓடிக்கொண்டிருந்தது. அதில் அந்த புதுஜோடிகள் இதுபோதும் என கடவுளுக்கு நன்றி சொல்கின்றார்கள். சூரியன் தூங்க போகிறான் ஆட்டம் பாட்டம் விருந்து என கடிகார முள் வேகமாக நகர்கின்றது. புது ஜோடியின் பழைய காலத்து படங்களை திரையில் காட்டுகிறார்கள். அவரா அந்த அம்மாவா என்னோடு இருப்பது என புது பாசம் வருகிறது. பெரிய கேக் வெட்டி மணமக்கள் கட்டிப்பிடித்து முத்தம் இடும்போது ஆரோக்கியம் வீடியோவை நிறுத்தினார். அந்த மாலைப் பொழுதில் அந்த குடும்பம் எதுவும் பேசவில்லை. ஒரு வாரம் கழித்து கரோலின் அனுப்பிய பட்டியலில் 321 பேர் இருந்தார்கள். கரோலின் அடிக்கடி கோவிலுக்குப் போவதாக சொன்னதைக் கேட்டு ஆரோக்கியம் ஞானம் ரவி சந்தோஷப்பட்டார்கள். சமாதானமாக வாழ பழகுவோம். யாரையும் வெறுக்க வேண்டாம். யார் மீதும் பகை கொள்ளாமல் நட்பைத் தேடிச்சென்று சமாதானம் சொல்வோம். எல்லோரும் எப்போதும் தேவை என வாழ்வோம்.

மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள், சாகிறவனுடைய சாவை

நாம் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார். (எசேக்.18:23.32) ●



## நசரேத்தூர் மரியா 28

Sr.M.லில்லி மரி ME,
புதுச்சேரி.

**குற்றச்சாட்டுகள்:**

இயேசுவைக் குற்றஞ்சாட்ட அவர் என்ன தவறு செய்தார்? பலர் அவர் மேல் நம்பிக்கை வைத்தது அவர் செய்த குற்றமா? அவர் தன் தந்தையைப்பற்றி அடிக்கடி பேசினாரே. அது குற்றமா? இதற்காக அவரைச் சுற்றி எல்லா நிலைகளிலும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன. அவர் மீது நம்பிக்கை கொண்டவர்கள் நம்பினார்கள்.

இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கி "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடராய் இருப்பீர்கள் உண்மை உங்களுக்கு விடுதலையளிக்கும் என்றார்." (யோவா 8:31-32) ஆனால் எதிரிகளோ அவரை மேலும் மேலும் விவாதத்தால் தாக்க ஆரம்பித்தனர். இந்தப் பேச்சுகள் எல்லாம் மரியாவின் காதுகளுக்கு எட்டுகின்றன. நாங்கள் ஆபிரகாமின் வழிவந்தவர்கள். நாங்கள் ஒருபோதும் யாருக்கும் அடிமையாக இருந்ததில்லை. அப்படியிருக்க நீ எப்படி உங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்று சொல்லலாம். அதற்கு இயேசு பதிலளிக்கிறார்: "நீங்கள் ஆபிரகாமின் வழி வந்தவர்கள் என்கிறீர்கள். நான் என் தந்தையிடம் பார்த்ததைச் சொல்கிறேன். நீங்களோ உங்கள் தந்தையிடம் கேட்டதைச் செய்கிறீர்கள்." (யோவா 8:37-38)

அவர்களுடைய தந்தை யார் என்று இயேசு குறிப்பிடுகிறார்? அதைப்புரியாத அவர்கள் சொல்கிறார்கள் "நாங்கள் வேசித்தனத்தில் பிறந்தவர்கள் அல்லர். இயேசு குறிப்பிட்டதோ சாத்தான் அவர்களுடைய தந்தை." மரியா அப்போது எங்கு இருந்தார்கள் என்று தெரியாது. ஆனால் இந்த விவாதங்களை எல்லாம் அவர் கேள்விப்பட்டிருந்தால் மிகவும் வருத்தப்பட்டிருப்பார். இயேசு வெளிப்படையாகவே பேசுகிறார்: "சாத்தானே உங்களுக்குத் தந்தை. உங்கள் தந்தையின் ஆசைப்படி நடப்பதே உங்கள் விருப்பம். தொடக்க முதல் அவன் ஒரு கொலையாளி. அவனிடம் உண்மை இல்லாததால் அவன் உண்மையைச் சார்ந்து நிற்கவில்லை. அவன் பொய் பேசும்போதும் அது அவனுக்கு இயல்பாக இருக்கிறது. ஏனெனில் அவன் பொய்யன். பொய்மையின் பிறப்பிடம்," (யோவா 8:44)



அவருடைய எதிரிகளும் சளைக்காமல் வாதிடுகிறார்கள் " நீர் ஒரு சமாரித்தன், உன்னிடம் சாத்தான் உள்ளது." (யோவா 8:48) தர்க்கம் நீடிக்கிறது. இயேசுவும் சோர்ந்துவிடவில்லை. "உங்கள் தந்தை ஆபிரகாம் நான் வரும் காலத்தைக் காண முடியும் என்பதை முன்னிட்டு பேருவகை கொண்டார். அவரைக் கண்டபோது மகிழ்ச்சியும் கொண்டார் என்றார்." (யூதர்கள் இந்தப் பட்டிமன்றத்தை முடிக்கவில்லை.) "யூதர்கள் அவரை நோக்கி "இன்னும் 50 வயது கூட ஆகவில்லை. நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயா?" என்று கேட்டார்கள்". இயேசு எந்தத் தயக்கமும் இன்றி உறுதியாக அவர்களிடம் "ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன்" என்றார். (யோவா 8:56-58)

இயேசு தன் சுய உருவத்தைக் காட்டிவிட்டார். முக்கியமாக கடவுளிடம் இருந்து வந்தவர் என்று வெளிப்படுத்திவிட்டார். இவ்வாறாக அவர்கள் முன் தன் மரணத் தீர்ப்புக்குத் தானே கையெழுத்து இட்டுவிட்டார். ஏனென்றால் கடவுள் மட்டுமே "நான் இருக்கிறேன்" என்று சொல்ல முடியும். (வி.ப. 8:14-15) சிமியோன் முன்னறிவித்த வாள் கொஞ்சம் கொஞ்சமாக மரியாவின் இதயத்தை நெருங்குகிறது. இயேசு எதிர்ப்பின் சின்னமாகிறார். யூதர்கள் அவர் மீது எறிய கற்களைப் பொறுக்குகின்றனர். இயேசுவோ எஸ்கேப் ஆகிவிட்டார். (யோவா 8:5)

**பிறவிக் குருடனைக் குணமாக்கியது:** தமிழில் ஒரு பழமொழி கூறுவார்கள் "இந்தப் பனங்காட்டு நரி அந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சாது". யூதர்கள்தாம் அவரைக் கல்லால் எறிய தேடினார்களே. நசரேத்தூருக்குப் போய் மரியாவின் பாதுகாவலில் இருக்கலாம் அல்லவா? இயேசு மீண்டும் தேவாலய வளாகங்களில் போவதும் வருவதுமாக இருக்கிறார். "இயேசு சென்றுகொண்டிருக்கும்போது பிறவியிலேயே பார்வையற்ற ஒருவரைக் கண்டார். ரபி, இவர் பார்வையற்றவராய் பிறக்கக் காரணம் இவர் செய்த பாவமா? இவர் பெற்றோர் செய்த பாவமா? என்று இயேசுவின் சீடர்கள் அவரிடம் கேட்டார்கள். அவர் மறுமொழியாக இவர் செய்த பாவமல்ல. இவர் பெற்றோர் செய்த பாவமும் அல்ல. கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும்பொருட்டே இப்படிப் பிறந்தார்" (யோவான் 9:1-3)

பிறவிக் குருடன் பார்வை பெறுவதையும் சட்ட வல்லுநர்கள் அவரை விசாரிப்பதையும் யோவான் விரிவாகக் கூறுகிறார். மரியா இதற்குச் சாட்சியாக இருந்தார்களா? இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் பாஸ்கா விழாவிற்காகத் திருப்பயணமாக எருசலேமுக்குச் சென்றிருப்பார்கள். பிறவிக் குருடன் பார்வையை மட்டுமல்ல விசுவாச ஒளியையும் பெற்றுக்கொண்டார். எனவேதான் இயேசு அவரை மீண்டும் சந்தித்தபோது "நீ மனுமகனை விசுவசிக்கிறாயா? என்று கேட்டார். அவர் விசுவசிக்கிறேன். ஆண்டவரே அவர் யார் என்றார். நீ பார்ப்பவரும் உன்னோடு பேசிக்கொண்டு இருப்பவரும் அவர்தான் என்றார். அவனோ அவர் முன் நெடுஞ்சாங்கிடையாக விழுந்து ஆண்டவரே விசுவசிக்கிறேன் என்றார்." (யோவா 9:35-38) இதன் பின் இயேசு நசரேத்துக்குத் தாயிடமும் சகோதரர்களிடமும் திரும்பியதுபோலத் தோன்றுகிறது. ஆனால் கலிலேயாவில் என்ன பணி செய்தார் என்று தெரியாது.

தொடரும்

### அன்னைக்குக் கரம் குவிப்போம் - 24

(முற்கால தற்காலச் செபங்கள் - தமிழாக்கம்

ச.லில்லி மரி) 06-08-2017



**Ephrem**

உமது பரிந்துரையை எனக்கு மறுக்காதேயும். இறைவனின் தாயும் என்றும் கன்னியுமான மரியே! நாங்கள் அபூர்வமாக உம் மகனின் வார்த்தைகளை கேட்பவர்களாக இருக்கிறோம். காரணம் எங்களுடைய எண்ணற்ற பாவங்கள். மிகவும் தூய அன்னையே! உமது பரிந்துரையை எங்களுக்கு மறுக்காதேயும். நீர் பெற்றெடுத்த உம் மகனிடம் எங்களுக்காக மன்றாடும். ஏனெனில் அவர் இரக்கம் நிறைந்தவராகவும் எங்களை மீட்க வல்லவராகவும் இருக்கிறார். அவரே எங்கள் மீட்புக்காக பாடுகளை ஏற்றார். ஆண்டவரே விரைந்து வாரும். உமது பாசத்தால் எங்களுக்கு உதவும். நாங்களோ எங்கள் பலமெல்லாம் இழந்து இருக்கிறோம். எங்கள் பாவங்களை அகற்றவும் உமது ஞானத்தால் எங்களை மீட்கவும் வாரும். ஆமென்.

### இவ்வாரத்தின் இறைவார்த்தை



"என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்குச் செவி சாயுங்கள்" (மத் 17:5)

✦ **டுவிட்டர்:** "ஒவ்வொரு சமூகத்தின் மிக அவசியத் தேவையாக இருக்கும். மனித, மற்றும் சமய பாரம்பரியத்தை, அடுத்தத் தலைமுறைக்கு வழங்க, ஒவ்வொரு குடும்பத்திலும், தாத்தாவும், பாட்டியும், முக்கியமாக விளங்குகின்றனர்." - டுவிட்டர் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ்.



# இயக்கமும் எழுச்சியும் புரட்சியும்

– சுவாமி ஆ. லூயிஸ்.

**ஆ**ண்டவருடைய படைப்பு முழுவதும் வியப்புக்குரியது. அதிலும் தனது சாயலாக படைக்கப்பட்டு வரும் மனிதம் மிகவும் வியப்புக்குரியது. இவைகளை இரசிப்பது. உணர்வது, கொண்டாடுவது நமக்கு எவ்வளவோ மேலானது, மகிழ்வு மிகுந்தது. நாம் வாழும் இக்காலத்தில் படைப்பையும், மனிதத்தையும் காணும்போது கவலையும் கண்ணீரும் வெளிப்படுகிறது. கடவுள் கருணை உள்ளவராக இருப்பதால் படைப்பும் மனிதமும் நல்வழியில் நலம் பெறும் என காலமெல்லாம் காத்துக் கொண்டிருக்கிறார். ஊதாரி மகன்களும் மகள்களும் பெருகி வரினும் கடவுளின் இரக்கத்திற்கு எல்லை இல்லை.

கடவுள் என்றுமே தன்னில் நிறைவானவர். தன்னிடமிருந்து வருபவை எல்லாம் நிறைவை நோக்கி பயணிக்கும் இயல்போடு படைக்கப்படுகிறது, பராமரிக்கப்படுகிறது, பாதுகாக்கப்படுகிறது, அவரில் நிறைவை அடைந்து பேரின்பத்தை சுவைக்கிறது என்ற வழிமுறையை நன்கு அறிந்து வளர்ந்து வெற்றி பெறுவோம், வேண்டுவோம். அவரோடு ஒத்துழைப்போம்.

**படைப்பின் இயக்கம்:** கடந்த காலத்தின் கணக்குகள் நிகழ்காலத்தில் காணக்கிடக்கினறன. வருங்காலத்தின் வரவுகள் நிகழ்காலத்தில் புதைந்துள்ளன. எனவே நிகழ் காலத்தில் படைப்பின் இயக்கத்தை ஒட்டுமொத்தமாக இயல்போடு உணர்வது படைப்பு முழுவதற்கும் பயன்தரும். இன்று படைப்பு முழுவதிலும் பன்முகத்தைக் காண்கிறோம். ஒருமையின் பெருமையை பன்மையின் வியப்பில் ஏற்போம்.

படைக்கின்றவரிடமிருந்து எழுபவை அனைத்திலும், அழிவுக்கு இடமிருக்க வாய்ப்பில்லை. அனைத்தும் இருப்பதற் கும் இயங்குவதற்கும் படைக்கப்படுகின்றது. இருப்பிலும் இயக்கத்திலும் சமத்துவம் உண்டு, படி நிலையும் உண்டு. எனவே எதையும் யாரையும் நாம் அலட்சியமாக எடுக்காமல், அவருடைய திருவுளத்திற்கு ஏற்ப உணரவும், மதிக்கவும், பேணவும் வேண்டும் என்பது படைப்பின் நியதியாகும்.

அணுவிலும் அண்டத்திலும் அவர் இருக்கின்றார், எனவே அனைத்தும் இயங்குகின்றன. படைப்பில் ஒவ்வொன்றும் தனது தன்மைக்கு ஏற்ப இயங்குகின்றது. படைப்பின் இயக்கத்தை நம்மைப்போல மனிதர்கள் இரசிப்பது நல்லது. படைப்பின் இயக்கத்தோடு, நம்முடைய இயக்கத்தையும் இணைத்துச் செல்வது நியதியாகும். படைப்பின் இயக்கத்தை நிறைவு செய்யாமல் புறக்கணிப்பது, எதிராக இயங்குவது நமக்கு பயன் தராது. பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அறிவியல் உணர்வது அவசியம்.

**படைப்பின் எழுச்சி:** படைக்கின்றவரில் இயக்கம், எழுச்சி, புரட்சி எல்லாம் ஒன்றாக, நன்றாக, ஒரே சமயத்தில் இடம் பெறுவது வியப்புக்குரியது. ஆனால் படைப்பில் இவை மூன்றும் படிப்படியாக வளர்வது, முதிர்வு அடைவது, முழுமைப் பெறுவதும் வியப்புக்குரியதாகும். எடுத்துக் காட்டாக விதை ஒன்றில் ஆற்றல் இருக்கிறது, நீரும் பூமியும் பக்குவமாய் இருக்கும்போது விதை விரிவடைகிறது. பின்பு உரிய நேரத்தில் விதை தன்னை உடைத்துக்கொண்டு செடியாக வெளிப்படுகிறது. இத்தகைய நிலைகளைத்தான் படைப்பில் காண்கிறோம்.

மனித குலத்திலும் இத்தகைய மகத்துவத்தை ஒரு குடும்பத்தில் குழந்தை ஒன்று பிறக்கும்போது நாம் காண முடிகிறது. கருவும் முட்டையும் தாயின் உதரத்தில் இணையும் போது, அவண் உறைந்திருக்கும் சக்தியானது ஒன்பது மாத மாக எழுச்சி பெற்று வடிவம் பெற்று வருகிறது. உரிய நேரத்தில் குழந்தை படைப்பின் புரட்சியாக குரலோடு உலகில் இல்லத் தில் பிறக்கின்றது. இவைகளில் இறைவனின் பராமரிப்பையும், படைப்பின், மனிதத்தின் ஒத்துழைப்பையும் உணர்ந்து படைப்பை கட்டி எழுப்புவதின் பொறுப்பினை உணர்வோம்.

படைப்பும் மனிதமும் எழுச்சிபெற தகுந்த சூழ்நிலை, மனநிலை, பாதுகாப்பு, பராமரிப்பு, கவனம், கரிசனை எல்லாம் தேவைப் படுகிறது. இவைகளில் ஏற்படும் பாதிப்புகள்தான் படைப்பிலும் மனித குலத்திலும் நாம் காண்கிறோம். மனிதப் பிறப்பில் இன்றைய சூழ்நிலையில் எழுச்சி முறையாக இடம் பெற சிக்கல்கள் உண்டு இவைகளை விலக்கி நல்லத் தலை முறையை பெற்றெடுத்து வளர்ப்பது நமது கடமையாகும்.

**படைப்பின் புரட்சி:** படைப்பிலிருந்து வெளிப்படுபவை அனைத்தும் படைக்கின்றவரின் பயன்மிகு படையல்களாகும். இவைகள் அனைத்தையும் தனது குழந்தைகளின் நலனுக் காக நாளும் எந்நேரமும் நல்கி வருகிறார் என்று பெருமகிழ்வோடும் நன்றிப் பெருக்கோடும் அவருக்குப் புகழ்பாடுவோம். காய்கனிகள், மலர்கள் மாணிக்கங்கள், புதையல்கள், நிறைவான வாழ்வுக்குத் தேவையானவைகள் அனைத்தையும் அருள்வது அவரது வள்ளல் தன்மையே!

படைப்பைப் போல அவரது பிள்ளைகளும் பெற்றெடுப் பதும் வியப்புக்குரியதாகும். கடவுளின் மூவித ஆற்றலோடும் மனித குலம் ஒத்துழைத்து பெற்றெடுப்பது எல்லாம் பூபாளம் பாடும் புரட்சிகளாகும். படைப்பின் புரட்சியைவிட மனித குலத்தின் புரட்சி வேறுபடுகிறது, மாறுபடுகிறது. நன்மையும் தீமையும் கலந்து இடம் பெறுவதால் படைப்பும் மனித குலமும் பல்வேறு விதத்தில் பாதிக்கப்படுகின்றனர். இறைவனின் அருள் நிபந்தனையின்றி நமக்குண்டு. நாம்தான் அவரோடு ஒத்துழைத்தால் உயர்வு உண்டு.

சுதந்திரத்தை சரியாக புரிந்துகொள்ளாமை, அறியாமை, முன்சார்பு எண்ணங்கள், நலம் குறைந்த பழக்க வழக்கங்கள், நம்பிக்கையின் பலவீனம், கல்லாமை, இல்லாமை, அநீதி, சுரண்டல், ஆதிக்கம் எல்லாம் மனித குலத்தில் புரட்சியை பன்முகத்தில் வெளிப்படச் செய்கின்றன. இந்நிலையை ஒழுங்குபடுத்தான் அரசும் சமயமும் நமக்குத் தேவைப்படுகின்றன.

புலன்களில் இருந்து எழும் புரட்சிகளில் நல்லவையும் அல்லவையும் உண்டு. விவேகத்தோடும் முன்மதியோடும் நல்லவைகளைப் பெருக்கி, அல்லவைகளைக் குறைத்து அனைவரும் நலமுடன் வளமுடன் வாழ வழி செய்வது மிகவும் நல்லது. ஆன்மாவான ஆவியில் இருந்து எழும் புரட்சி எப்போதும் பயனுள்ளதாக இருக்கும் என்ற நம்பிக்கையில் மனிதகுலம் வளர்வதாக! யார் எந்த சமயமாயினும் கடவுள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையே உயர்வானது. நம்பிக்கை இருப்பின் கடவுளின் திருவுளத்தை மனித விருப்பம் ஏற்றுக் கொள்ளும், தொடர்ந்து அவர் அருளும் திட்டத்தை நாம் செயல் படுத்துவோம். இதனால் இடம்பெறும் புரட்சி ஆவியின் புரட்சியாக அமையும்.

**வாழ்க்கை வாழ்வதற்கே!:** ஞான ஆகமத்தில் அருள்வாக்கு கூறுவது போல வாழ்க்கை வாழ்வதற்கே அருளப்பட்டு வருகிறது. வாழ்வில் அழிவையும், சாவையும், நோய் நொடிகளையும் மனிதகுலம்தான் பெருக்கிக்கொண்டு வருகிறது. ஏன் பிறந்தேன் என்ற கவலையினால் பலர் வாழ்ந்தாலும் இறந்து கொண்டே இருக்கின்றனர். சிலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். இதைவிட சிலர் கொலை செய்வதில் புனித போர் புரிகின்றனர், அழிவுக்கு அர்த்தமும் நியாயமும் தருகின்றனர். இப்பின்புலத்தில் வாழ்வு என்பது எவ்வளவு பயத்திற்கும் அச்சத்திற்கும் ஆளாகிறது என்பதை அயலானோடு நம்மோடு உணர்ந்து பார்ப்போம். உணர்வுக்கு ஏற்ப உயர்ந்திட உதவுவோம், ஒத்துழைப்போம், ஒன்றுபடுவோம்.

கடவுள் தரும் மிக உயர்ந்த கொடையான வாழ்வின் பொருளையும் புனிதத்தையும் அறிந்து முழுமையாக ஏற்று வாழ்வோம், வாழவைப்போம். நாம் மிகுதியாக வாழ்வு பெறவே திருப்பலியில் தினம் இயேசு அருள்வாக்கு வழியாக, திருவிருந்து வழியாக வாழ்வை வழங்கிக் கொண்டு வருகின்றார். திருப்பலி திருச்சபைக்கு மட்டுமல்ல, மனித குலம், படைப்பு முழுவதற்கும் உரியது என்பதால் பலி வழி வாழ்வு வளம்பெற இடமுண்டு என்பதை ஆழமாக நம்பி, அர்த்தமுள்ள பலிக்கொண்டாட்டத்தைக் கொண்டாடுவோம். அதோடு கிறித்தவர்கள், பிற சமயத்தினர் மேற்கொள்ளும் அருட்பணி வழியாக எல்லாருடைய வாழ்வும் நிறைவு பெறுவதாக. நம்பிக்கையில் நாளும் வளர்வோம், புதிய வாழ்வு, புதிய யுகம் இதயத்திலும் இல்லத்திலும் தினம் மலர்வதாக! வாழ்க வாழவிடு! ●



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 17ஆம் படலம்

யாவே கடவுள் ஏவிய நான்காவது ஈ வாதையால் எகிப்து நாடே பாழ்பட்டது; இவ்வாதை பார்வோனையும் எகிப்திய தெய்வங்களையும் தலைகுனிய வைத்தது. இது, கடவுள் மக்களாகிய இசுரயேலரை மீட்பதற்குரியஅடையாளமாயிற்று. இவ்வாதையினின்று தானும் நாடும் விடுபடமோசே, ஆரோனுக்குரிய ஆண்டவரின் தலையீட்டால்தான் இயலுமென்னும் முடிவுக்குப் பார்வோன் இரண்டாம் இராம்சேசு வந்தான்!

**30 எங்கணும் ஈக்களின் நடமாட்டம்! எல்லாவற்றையும் படைத்துக் காத்துவரும் யாவே கடவுளின் ஆணையின் பேரில் நடப்பதால் (விடு.8:21) எங்கெங்கிருந்தோ, இருந்த இடங்களையெல்லாம் கடந்து வந்து எகிப்தில் புகுந்து பார்வோன் நாட்டையே பாழ்படுத்தின (விடு.8:24). இது இறைச் செயலின் விளைவு. இதற்கு எதிர்க்கேள்விக்கு ஏது இடம்!**

ஈக்களோ ஈக்கள்! இலாவிடம் எதுமிலை!
　　ஈக்களின் இனங்கள் சினமுற் றவையெலாம்
காக்கிற கடவுள் காரியம் இதுவெனக்
　　கடந்தவை இருந்த இடமெலாம் தாண்டி,
தாக்கிடப் பறந்தே எகிப்தினில் புகுந்தே
　　தாக்குத் தாக்கென தாக்கின வெறியுடன்!
கேக்கிற மானிட இனங்களே கேட்கிறேன்
　　கேள்வியும் இறைவனைக் கேட்பவன் உளன்கொலோ?

(கடவுள் காரியம் - பார்வோனால் அடிமைப்படுத்தப்பட்ட இறைமக்களாகிய இசுரயேலரை மீட்டு விடுவிக்கும் யாவே கடவுளின் செயல்பாடு; தாக்குத் தாக்கெனத்தாக்கின - பலவாறு தாக்கி வதைத்தன)

**31 அடுத்து, ஈக்களின் படையெடுப்போ, பார்வோனின் மதில்சூழ் பாதுகாப்பு மிகுந்த அரண்மனை நோக்கித் திரும்பியது! மேலும், எகிப்திய தெய்வங்களுக்கு நாள்தோறும் வழிபாடியற்றும் சமயக் குருக்களின் தெய்வீக ஆற்றலைக் குலைத்து வருத்தமுறச் செய்யவும் ஈக்கள் கூட்டங்கூட்டமாய்க் குவிந்தன.**

அரசனின் அரண்மனை உள்ளும் புறமும்
　　அடர்ந்து திரண்ட வெறிகொள் ஈக்களோ,
முரண்படா தொன்றாய்க் கூடிக் குமுறவே
　　முகம்சுளித் தனைவரும் அருவருப் படைந்தனர்!
வரம்தரு தெய்வ வழிபா டெல்லாம்
　　வரும்வழி முறைப்படி நிகழ்த்திடும் குருக்கள்,
இரவுடன் பகலும் ஈக்கள் கூட்டமாய்
　　எங்கணும் நிறைந்திடர் செய்ததால் திணறினர்!

(அடர்ந்து - நெருக்கமாய்; வரும்வழி முறைப்படி - காலங்காலமாய் நிகழ்த்தும் தெய்வவழிபாட்டு நெறிப்படி)

**32 ஈக்கள் என்பவை உருவத்தில் சிறியவைதானே; அவைகள் தரும் எத்தொல்லைகளில் இருந்தும் மனிதர்கள் தங்களை எளிதில் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதுதான் மனிதர்களின் எண்ணம். ஆண்டவரின் தண்டனையாக, எகிப்திய அரசனின் மனித நேயமற்ற ஆளுகைக்கு எதிராக இறைவன் படைத்த ஈக்களே கிளம்பின என்பதுதான் வியப்பினும் வியப்பு! இறைவனால் எதுவும் இயலும் என்பதை மனிதனின் சிற்றறிவால் அறிந்துகொள்வது என்பது இயலாத ஒன்றே!**

ஈயென் செய்யும் என்றலோ எண்ணினர்,
　　ஈதலோ உலக மானிடர் பார்வை;
நாவில் எலும்பெதும் இல்லா மாந்தரோ
　　நாற்புறம் சுழற்றிப் பேசுவர் எதையுமே!
பூவின் மணமதைக் கண்ணால் காணார்,
　　புந்தியின் வடிவதும் யாதென அறியார்;
சாவின் நாளதை எண்ணிடா திருந்தே
　　சட்டென மடிந்து கனவெனப் போவார்!

(ஈதலோ-இதுவல்லவா; புந்தியின் - மனத்தின், அறிவாற்றலின்; சட்டென-எதிர்பாராமல் திடீரென)

**33 கடவுள் படைத்துள்ள அனைத்தினும் மனிதனே உயர்ந்த படைப்பாக உள்ளான். மனிதன் அவரோடு கொள்ளும் நல்லுறவால் என்றும் எந்நேரமும் எவ்விடத்தும் அவனுடனே கடவுள் இருந்து, அன்பருள் பொழிந்து, அவனை அரவணைத்துக் காக்கின்றார்.**

படைப்பில் மனிதன் உயர்படைப் பென்பதால்
　　படைத்தவ ரோடு அவன்கொள் உறவினால்,
நடையில் அவன்கரம் பிடித்திறை அவனுடன்
　　நடந்தே வந்தும், நலிவுறும் வேளையில்
அடைகாத் திடும்ஒரு கோழியாய்க் கடவுள்
　　அகன்ற சிறகினுள் பொத்தியே காத்தும்
குடையின் நிழலாய் இருந்தே அவனது
　　குறைபறந் தோட தாயெனப் பார்க்கிறார்!

(அகன்ற சிறகினுள் - விரிந்த அவருடைய கருணைக் கரங்களுள்; தாயெனப் பார்க்கிறார் - பால் நினைந்தூட்டும் பெற்ற தாயைவிட மேலாய்க் கண்காணிக்கிறார்.)

63

## இளம் உள்ளங்களுக்கு

# அடுத்த படைப்பு

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.



**பிரான்சுவா பெனலோன்:** "கடவுளின் அன்பு தன் படைப்பிடம் முழுமையை, நிறைவை எதிர் பார்ப்பதில்லை. ஏனெனில் அது கடவுளுக்கு மட்டுமே உரியது. அந்த எதிர்பார்ப்பு இல்லாததால் ஏமாற்றம் ஏதுமில்லை."

**ஓவியர் ரஃபேல் (Raphael):** இத்தாலியில் வாழ்ந்த ஓவியர் ர.:.பேல் உலகின் தலைசிறந்த ஓவியர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். அவர் வாழ்ந்தது 37 ஆண்டுகளே. ஆனாலும் அந்த குறுகிய கால வாழ்க்கையில் அவர் நிகழ்த்திய சாதனைகள் அளவிடமுடியாதது. அவர் வரைந்த கடைசி ஓவியம் **இயேசுவின் உருமாற்றம்.** இது அவரது மிகச் சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது.

**அடுத்த படைப்பு:** ர.:.பேல் எப்போதும் தன் படைப்புகளில் முழுமையை எதிர்பார்ப்பார். அதற்காகவே தொடர்ந்து கடினமாக உழைத்து நுணுக்கமாக தன் ஓவியங்களை வரைந்தார். ஒருமுறை ஒரு ரசிகர் அவரை பார்த்து, "உம்முடைய ஓவியங்களிலேயே மிகச் சிறந்ததாக எதை சொல்லுவீர்கள்?" என்றார். அதற்கு ர.:.பேல், "என்னுடைய அடுத்த படைப்பு" என்று மிகுந்த தன்னடக்கத்துடன் கூறினார்.

**மையக் கல் (Keystone):** ர.:.பேலின் பதில் மிகுந்த ஆச்சரியத்தை தந்தாலும் அதுதான் உண்மை. உயர்ந்த நிலைபாட்டிற்காக அசாதாரணமான நுண்ணறிவிற்கு அது அறிகுறி. கிறிஸ்தவ வாழ்வில் அதுதான் மையக் கல். ஏனெனில் முழுமைக்கு நூறு சதவீதம் எடுத்துக்காட்டாக விளங்கியவர் ஒருவரே. அவர்தான் இயேசு கிறிஸ்து. இத்தகைய முழுமை நம் வாழ்வில் எட்டாக் கனியாக இருந்தாலும், எட்டிப்பிடிக்க முயற்சி செய்ய வழியும், வாழ்வுமாய் இருப்பவர் அவரே. கிறிஸ்தவ வாழ்வு வாழ நம்பிக்கையுடன் முயற்சித்தாலும், அதை அடைவதில் உள்ள குறுக்கீடுகளாலும், தடைகளாலும் துவண்டு விடக்கூடாது. ர.:.பேல் போல் அடுத்த நல்ல முயற்சியில் உறுதியுடன் மனதை செலுத்துவோம்.

✷ **ஈராக்கின் 15 கோவில்களில், லூர்து அன்னையின் திருஉருவம்:** ஈராக் நாட்டில் இஸ்லாமிய தீவிரவாதிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட நினிவே சமவெளிப் பகுதியில் உள்ள 15 கோவில்களில், லூர்து நகர் அன்னை மரியாவின் திரு உருவச்சிலை நிறுவப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று பீதேஸ் (Fides) செய்திருக் குறிப்பொன்று கூறுகிறது. இஸ்லாமிய அரசு என்றழைக்கப்படும் தீவிரவாத அமைப்பு, கடந்த மூன்று ஆண்டுகளாக Qaraqosh, Telkaif, Alqosh, Karamles ஆகிய ஊர்களில், இடித்துவிட்ட கிறிஸ்தவ கோவில்கள், தற்போது, மீண்டும் கட்டப்பட்டு வருகின்றன. புதுப்பிக்கப்படும் இந்த ஆலயங்களில், லூர்து நகர் அன்னை மரியாவின் திரு உருவம் நிறுவப்படுவதற்கு, பிரெஞ்சு கத்தோலிக்கக் கழகம் முயற்சிகள் எடுத்து வருகிறது என்று பீதேஸ் செய்தி கூறியுள்ளது. தார்ப் மற்றும் லூர்து மறைமாவட்டத்தின் ஆயர் Nocolas Brouwet அவர்களால் அர்ச்சிக்கப்பட்ட அன்னை மரியாவின் திருஉருவங்கள், லூர்து திருத்தலத்திலிருந்து நினிவே சமயவெளிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள கோவில்களில் தற்போது நிறுவப்பட்டு வருகின்றன.

**34 இச.6:6 "உன் முழு இதயத்தோடும் உன் முழு உள்ளத்தோடும் உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக" லேவி.19:18 "பழிக்குப் பழியென உன் இனத்தார்மேல் காழ்ப்புக் கொள்ளாதே. உன் மீது நீ அன்பு கொள்வதுபோல் உனக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக"**

அன்றே மொழிந்த இறைமொழி இருமொழி
　　அனைவர்க் குரித்தாய் அறிந்திடு மானிடா,
மன்னி என்றுமே நிறைந்தனைத் தெதிலுமே
　　மாவருள் உருவாய் ஒளிர்ந்திடும் இறையையும்
உன்தன் னோடு உனக்கிணை என்றிவண்
　　உறைந்து உன்னுடன் வாழ்ந்திருப் பவனையும்
உன்னின் உறவாய் அன்பினைச் செலுத்தி
　　உலகில் வாழ்ந்திட இறைஉனக் குரைத்தனன்!

(மன்னி - நிலைபெற்று; உன்னுடன் வாழ்ந்திருப்பவனையும் - உனக்கு அடுத்திருப்பவனையும்)

**திறமையுடையவரே பதவியில் உயர்வார் என்பதில்லை. (ச.உ.9:11)**



## பொதுநிலையினரின் அழைப்பும், பணிகளும்.

சிந்தனைச் செல்வர், பேராசிரியர்
அ.குழந்தைராஜ்-காரைக்குடி

**பொது** நிலையினராகிய நாம் பணி செய்து கொண்டு அவர்பால் ஈர்க்கப் பட்டதே இறைவனின் அழைப்பாகும். நம்முள் ஏதோ ஒரு தூண்டும் சக்தி இருப்பதாக அறிகிறோம். நம்மால் இந்த எளிய பணியிலிருந்து விடுபட முடிய வில்லை. பணி செய்யாவிட்டால் ஏதோ குறை உள்ளது போல் வெற்றிடமாக, தூக்கம் வராமல் உள்ளதா? அப்படி யெனில் நீங்கள் தான் உண்மை பொது நிலையினர், பணிசெய்ய அழைக்கப் பட்டவர்.

அழைப்பு என்பது ஆபிரகாம், மோசே, எரேமியா, எலியா, எசக்கியேல், தானியேல், மரியா, யோசேப்பு, யோவான், பவுல் என்பவர்களுக்கு மட்டுமல்ல, நாம் ஒவ்வொருவருக்கும் உண்டு. 'அருள் மிகப்பெற்றவரே' என்று கபிரியேல் மரியாவை வாழ்த்தி அழைத்தது போல் "இவரே என் அன்பார்த்த மகன், இவரில் நான் 'பூரிப்படைகிறேன்'" என்று இயேசுவை அடையாளம் காட்டியது போல நம்மையும் இறைவன் 'அருள் மிகப் பெற்றவரே' உன்னை நான் அழைத்துள் ளேன்' என்கிறார். கடவுள் நம்மை 'ஞானிகள்' என்பதனால் தேர்ந்து கொள்ளவில்லை. "நீங்கள் அழைக்கப் பட்ட நிலையை எண்ணிப் பாருங்கள். கணிப்பின்படி உங்களுள் ஞானிகள் எத்தனை பேர்? உயர் குடிமக்கள் எத்தனை பேர்? ஆனால் கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த, மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார். அவ்வாறே, வலியோரை வெட்கப்படுத்த, வலுவற்றவை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார். உலகம் ஒரு பொருட்டாகக் கருதுபவற்றை அழித்துவிட அது தாழ்ந்ததாகக் கருதுபவற்றையும் இகழ்ந்து தள்ளுபவற்றையும் கடவுள் தேர்ந்தெடுத்தார். எவரும் கடவுள்முன் பெருமை பாராட்டாதபடி அவர் இப்படிச் செய்தார்" 1 கொரி 1:26-29. சவுலை நீக்கிவிட்டு தாவீதை அரசனாக்கிய போது கடவுள் கூறுகிறார் "நான் மனிதர் களைப் போல நீதி வழங்குவதில்லை. மனிதன் வெளி அடையாளங்களைப் பார்க்கிறான். ஆனால் கடவுளோ மனித உள்ளத்தை அறிகிறார்."

ஏசாயா 49:1 கூறுகிறது "நான் பிறப்பதற்கு முன்பே கடவுள் என்னைத் தேர்ந்து கொண்டு அவரின் பணியாள னாக என்னை நியமித்தார்.

எரேமியா 1:5 "உலக நாடுகளுக்கு உன்னை இறைவாக்கினனாக நீ பிறப்பதற்கு முன்பே உன்னை தேர்ந்து கொண்டேன்.

பவுல் (கலா.1:15-16) புறவினத் தாருக்கு கடவுளின் செய்தியை அறிவிக்க கடவுள் தன் அருளால் நான் பிறக்குமுன்னே தேர்ந்து கொண்டார்.

கடவுள் நம்மைத் தேர்ந்து கொண்டது ஏன்? காரணம் அவர் என்னை நேசிக்கிறார். எனக்கென்று ஒரு திட்டத்தை வைத்துள்ளார். அவருடைய மகனைப்போல் என்னை மாற்ற திருவுளம் கொண்டுள்ளார். "என் மூலம் இறைவார்த்தையை முழுமையாக உங்களுக்கு வழங்கும் பொறுப்பைக் கடவுள் எனக்குக் கொடுத்தார்" (கொலோ 1:25).

திருமுழுக்கு, உறுதிபூசுதல் பெற்ற அனைவரும் கடவுளின் மீட்புத் திட்டத்தை அறிவிக்க குருத்துவ பணி, இறைவாக்குப் பணி, ஆட்சிப்பணி செய்ய அழைக்கப்படுகிறோம். (திருச்சபைச் சட்டம் 225-1).

கடவுள் நம்மை நம் தனிப்பட்ட அருங்கொடைகளால் நிரப்பியுள்ளார். நம்மிடம் என்ன அருங்கொடை உண்டு என்பதை எப்படி அறியலாம்? கடவுள் நம்மைக் காட்டிலும் பிறரை, படித்தவர் களை, அறிஞர்களை அழைத்திருக் கலாம். ஆனால் அவர்களையெல்லாம் விட்டுவிட்டு நம்மை அழைத்தார் என்றால் அதில் ஏதோ ஒரு 'மறை பொருள்' உள்ளது. கடவுளின் அழைப்பு நிரந்தரமானது, மாற்ற இயலாதது. தனது கொடைகளை மீண்டும் பெற்றுக் கொள்பவர் அல்ல நம் கடவுள்.

"ஏனெனில் கடவுள் தாம் விடுத்த அழைப்பையும் கொடுத்த அருள் கொடைகளையும் திரும்பப் பெற்றுக் கொள்வதில்லை. (உரோ.11:29) கடவுளின் அழைப்பு நாம் விருந்துண் ணும் மகிழ்ச்சி போன்றது. கடவுளின் அழைப்பு புதையலுக்கும் முத்துக் களுக்கும் ஒப்பானது. ஒருவன் அதை அடைய எல்லாவற்றையும் விற்று அவைகளை அடைகிறான்.

நம்முடைய சேமிப்புக்களை விண்ணகத்தில் வைக்க அழைக்கிறார். அங்கே திருடர்களும் இல்லை, அந்துப் பூச்சியும் இல்லை (லூக்.12:33). புனித அந்தோணியார் அடிக்கடி சொல்வது இதுதான் "எங்கே உன் செல்வம் உள்ளதோ அங்கே உன் இதயமும் இருக்கும்" (லூக்.12:34) ஒரு மனிதன் முழு மனித வாழ்க்கை வாழ இறை அழைப்பை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பணம் மெத்தையை வாங்கலாம் - சுகமான தூக்கத்தைத் தராது.

பணம் வீட்டை வாங்கலாம் - அமைதியான இல்லம் தராது.

பணம் விலையுயர்ந்த பொருட் களை வாங்கலாம்- ஆனால் சுகத்தை அல்ல.

பணம் அழகு சாதனங்களை வாங் கலாம் - ஆனால் அமைதியை அல்ல

பணம் புத்தகத்தை வாங்கலாம் - அறிவைத் தராது.

நாம் எந்த நிலையில் அழைக்கப் படுகிறோமோ அதே நிலையில் நின்று நற்செய்திப் பணிப் புரியலாம். உடலின் முக்கியமான உறுப்புக்களும் அதனதன் பணியைச் செய்வது போல் நாமும் செய்யலாம். இதற்காக ஒருவன் "தான் பார்க்கும்" வேலையை விட்டு விட்டு நற்செய்திப் பணி செய்வது என்றால் வேலை பார்க்கும் பணித்தளங் களில் யார் நற்செய்தி சொல்வது? அங்கே 'சின்னச்சின்ன' இயேசு இருக்க மாட்டார்களே! மிகப்பெரிய சாதனை கள் புரிந்தவர்கள் கூட பெரிய காரியங் களை பெரிதாகச் செய்தவர்கள் அல்ல.

தொடர்ச்சி 9–ஆம்பக்கம்

## எழுவீர் புத்துலகம் படைத்திடுவீர்



### 9) நம்பர் -1, மாணவன் பூஜ்ஜியம்

இறை ஊழியன் அருட்திரு.**அ.பெலிக்ஸ் ஜோசப்**,சே.ச. திருச்சி.

சென்ற இதழ் தொடர்ச்சி...

**த**லைமை ஆசிரியர் அவன் வரலாற்றைப் படித்து விட்டு உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் எனக்கேட்டார். அவனோ அம்மா வேண்டும். அம்மா இல்லாமல் என்னால் முடியலே போறேன் என விருட்டென்று தலைமை ஆசிரியர் அறையிலிருந்து வெளியே ஓடப் பார்த்தான். அங்குள்ள பியூன் அவனை இழுத்து வந்து சின்ன ஸ்டூலில் உட்கார வைத்தார். தலைமை ஆசிரியர் அவன் அருகில் சென்று நீ தான் வேண்டும். நான் சொன்னால் செய்வாயா. எனக்கு நீ தான் வேண்டும் என்ற வாக்கு நான் சொன்னால் செய்வாயா. எனக்கு நீதான் வேண்டும் என்ற வாக்கு தான் மனதில் உறுத்தியது. பலமுறை அதைச் சொல்லிக் கொண்டு இருந்தார். வகுப்பு ஆசிரியரை அழைத்து வாழ்க்கை வரலாற்றைப் படிக்கச் சொன்னார். சிறிது நேரம் ஆசிரியரை போகச் சொன்னார். வேறு ஆசிரியரை அழைத்து வரச் சொன்னார். அவரும் பணிவோடு வந்து வணக்கம் செலுத்தினார். இந்த மாணவனை நீங்கள்தான் படிக்க வைக்க வேண்டும் இவன் ஒரு நல்ல பையன், அம்மா அப்பா இல்லை என்றார். வந்த ஆசிரியர் பையனைப் பார்த்தார். அவர் பெயர் சொல்லி அழைத்தார். எழுந்து நிற்க வைத்து அவன் தோள்மேல் கரங்களை வைத்து அரவணைத்தார். சிறிது நேரம் மாணவன் அழுதான். பெரும் நிசப்தம் பின் சார் நான் நன்றாகப் படிப்பேன். முதல் முறை என் பெயரைச் சொல்லி அழைத்தீர்கள் என்னை அரவணைத்தீர்கள். அன்று முதல் மாணவன் நன்றாகப் படிக்க ஆரம்பித்தான். அந்த ஆசிரியருக்கு குழந்தை பாக்கியம் இல்லை. அவரும் வீட்டில் வைத்துப் படிக்க வைத்தார். அனுதினமும் காலையிலும், மாலையிலும் தலைமை ஆசிரி யரைப் பார்த்து வணக்கம் கூறிவிட்டு வீட்டிற்கு செல்வான். புது ஆசிரியர் அவனைப் பின்னால் உட்காரவைத்து வீட்டிற்கு அழைத்துச் செல்வார். காலையில் பள்ளிக்கு அழைத்து வருவார். புது அத்தியாயம், புதுப்பிறப்பு, எங்கு ஈரநெஞ்சம் உள்ளதோ அங்கு புதுமாணவன் பிறப்பான்.

# ஆகஸ்ட் - 10, கருப்பு நாள்



# தலித் கிறிஸ்தவர்களை SC பட்டியலில் சேர்க்க கோரி மாபெரும் கண்டன அறப்போராட்டம்

***தலைமை தபால் நிலையம் எதிரில், புதுச்சேரி.***

***என் அன்பு சகோதரமே!***

நம் பாரத முதல் குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் "1950ம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆணை" யில் இல்லாத 3ம் பத்தி ஒன்றை சட்டத்துக்கு புறம்பாக இணைத்து அதில் "இந்துக்கள் அல்லாத பிற தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்தவர்கள் யாரும் தாழ்த்தப்பட்டவர்கள் என கருதப்பட மாட்டார்கள்" என்று எழுதி ஆகஸ்ட் 10ம் நாள் கையொப்பமிட்டார். அந்த நாள் தலித் கிறித்தவர் களாகிய நமக்கு "**கருப்பு நாள்**", மத அடிப்படையில் தலித்துகளை பிரித்த நாள், தலித் கிறிஸ்தவர்களின் உரிமைகளை, பாதுகாப்பையும் பறித்த நாள். கிறிஸ்துவம் தழுவிய பட்டியல் வகுப்பினரின் வாழ்வை சவக்குழியில் தள்ளிய நாள்.

- அரசியல் சாசன பிரிவு - 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிறது.
- பிரிவு - 15 (1) ல் சாதி மதம் இனம் பால் பிறப்பிடம் என்னும் அடிப்படையில் பாகுபாடு கூடாது என்கிறது.
- பிரிவு-16(1) அரசு பணிகளில் சமமான வாய்ப்புக்கள் அளிக்கப் பட வேண்டும் என்கிறது. ஆனால் இந்த ஜனாதிபதி ஆணை
- மதத்தின் அடிப்படையில் பட்டியலினத்தாரை பிரிக்கிறது.
- இந்து மதத்தை தழுவாத பட்டியலினத்தாரை அந்நியப் படுத்துகிறது.
- இது அரசியல் சாசன சட்டத்திற்கே எதிரானது.
- இந்தியாவின் மதசார்பற்ற தன்மையை ஒழிக்கிறது.
- அரசியல்சாசனசட்டப்பிரிவுகள் அளிக்கும் உரிமைகளை மறுக்கிறது.

அதனால் தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களாகிய நாம் கடந்த 67 ஆண்டுகளாக கல்வி, வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு, பொருளாதார முன்னேற்றம், அரசியலில் தேர்தலில் தலித் தொகுதிகளில் நிற்கும் உரிமை, சட்டப் பாதுகாப்பு, ஆகிய உரிமைகளை இழந்தோம். இழந்த நம் உரிமைகளை மீட்டெடுக்க, கடந்த 24-10-1950 முதல் நம்மை எஸ்.ஸி பட்டியலில் சேர்க்கும் கோரிக்கையை வலியுறுத்தி ஆகஸ்ட் 10 ஆம் நாளை "**கருப்பு நாளாக**" அனுசரிக்கிறோம்.

இந்த ஆண்டும் வருகிற 10-08-2017 வியாழன் அன்று நம் உயர் மறைமாவட்ட அளவில் பாண்டிச்சேரி ***தலைமை தபால் நிலையம்*** எதிரில் நம் **பேராயர் தலைமையில்,** மறைமாவட்ட **முதன்மை குரு முன்னிலையில்,** காலை 10 முதல் 1 மணி வரை மாபெரும் கண்டன அறப் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

மனித நேயத்திலும் சனநாயகத்திலும் அக்கறையுடைய பல இயக்கங்கள், அமைப்புகளில் இருந்து கோரிக்கை உரையாற்ற இருக்கிறார்கள். எனவே இறைமக்கள், குருக்கள், கன்னியர்கள், இயக்க முன்னோடிகள், சமூக ஆர்வலர்கள், அனைவரும் வருகை தந்து நமது உரிமையை வென்றெடுக்க இணைந்து போராடுவோம்! வாருங்கள்!!

**இவண்**

- ❖ **SC / ST பணிக்குழு - புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம்.**
- ❖ **தேசிய தலித் கிறிஸ்தவர் பேரவை (NCDC)**
- ❖ **தலித் கிறித்தவர் விடுதலை இயக்கம் (DCLM)**
- ❖ **அனைத்து திருச்சபை அமைப்புகள்.**
- ❖ **இஸ்லாமிய சகோதரர்கள். ❖தோழமை தலித் இயக்கங்கள்.**

Cell: 9751990996, 9443321351



## வன்முறை களைவோம்!

*ச. செல்வராஜ், விழுப்புரம்.*

**ஆ**தாம் ஏவாள் கடவுளுக்குக் கீழ்படியாமல் அலகைக்குக் கீழ்ப்படிந்ததால் ஒருவருக்கொருவர் குற்றம் சுமத்துகிற 'வார்த்தை வன்முறை' முதன் முதலாய் உலகில் அரங்கேறியது. இதுவே பிற்காலத்தில் ஒருவரை ஒருவர் சாடிப் பழித்துப் பேசுகின்ற இழிப் பண்பாக மாறியது. ஆபேல் மேல் கொண்ட பொறாமையால் காயின் தொடுத்த ஆணவக் கொலை, பாரில் முதல் 'உடல் வன்முறை' யானது. இன்றும் அது தொடர்கிறது. அறிவியல் மேதை நியூட்டனின் "ஒவ்வொரு வினைக்கும் எதிரானதும் சமமானதுமான எதிர்வினை உண்டு" என்பது இன்று வரை தவறாக மெய்ப்பிக்கப் படுகிறது. ஆரோனும் மரியமும், மோசேயைப் பொறாமையின் அடிப்படையில் விமர்சனம் செய்வது மூன்றாம் வகை வன்முறை. இன்றும் புறம் சொல்லிப் பிறரைச் சாடுவது சமூக ஊடகங்களிலும், தனிப்பட்ட வாழ்வுத் தளங்களிலும் எதிரொலிக்கிறது. "பல்லுக்குப் பல் கண்ணுக்குக் கண்" இன்றுவரை தொடர்கிறது. அது முச்சந்தியில் விவாதிக்கப்பட்டு நீதிமன்றம் வரை செல்கிறது.

என்னுடைய பள்ளிப் படிப்பின்போது, வெளி அரங்கில், இரு சக மாணவர்களின் வாக்குவாதம் ஏச்சுக்கும் பேச்சுக்கும் கைகலப்புக்கும் முத்தாய்ப்பாய் அமைந்தது வேறு இரு பெரிய மாணவர்களின் தூண்டுதலே! எனது வீட்டருகில் தொடக்கப் பள்ளியில் படித்தத் தன் பேரனை, அடித்த ஆசிரியரைக் கல்லால் அடிக்க உசுப்பேத்தும் பாமரப் பெண்மணிப் போன்றோர், வன்முறையின் வடிகால்களே! நான் பணி யாற்றிய ஒரு நகரத்துப் பள்ளியில் 6, 7 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களே பிளேடு சிறு கத்திகளை சட்டைப் பையில் கொண்டு வரும் கலாச்சாரத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள் என்றால் வன்முறையின் வளர்ச்சியைத் தெள்ளெனக் காணலாம். பிஞ்சு வயதிலேயே இதுபோன்ற பழக்க வழக்கங்கள் சமூகத்தில் வேரூன்றுவது ஏனோ?

கிராமங்களில் நிகழும் வரப்புத் தகராறு, வாய்க்கால் தகராறு நாடுகளுக்குள்ளும் நிலவுவது வியப்போ? குடும்பங்களிலும், நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும் வாய்ப்பேச்சு வன்முறையில் முடிவது சகஜமாகி வருகின்றதன்றோ? இதன் உச்சமாய் சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் விவாதம் விரசமாய்ப் போவதுக் கண்கூடன்றோ? இப்படியாக, வீட்டிலும், நாட்டிலும், உலகிலும் 'வன்முறைக் கலாச்சாரம்' நாளாரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாய் அருகிப் பெருகி வருவது மறுப்பதற்கில்லை. உலக மெல்லாம் ஆதாயமாக்க கங்கணம் கட்டிய மகா அலெக்சாண்டர், ஆங்கிலேயர், சக்கரவர்த்தி அசோகர் இன்னும் பிறர் எதைக் கண்டார்கள். "விட்டுக் கொடுப்பவன் கெட்டுப் போவதில்லை; கெட்டுப் போகிறவன் விட்டுக் கொடுப்பதில்லை" என்ற வாக்கு எத்துணை உண்மை!

தான் உயர்ந்தவன், தன் இனம் உயர்ந்தது, தன் மதம் பெரிது என்ற போக்கில் சில தீவிரவாத, பயங்கரவாத அமைப்புக்கள் இப்பிரஞ்சத்தையே 'கலவரப் பகுதி' யாக மாற்ற முயற்சிக்கின்றன. தாங்களே சர்வ வல்லமைப்படைத்தவர்கள் என்ற மிதப்பில் காரியங்கள் அரங்கேறுகின்றன. இதற்காகப் 'பாசறைப் பயிற்சி' களெல்லாம் பெறுகின்றனர். படைத்தவரை மறந்து தங்களை மையப்படுத்துகிற மனமாச்சர்யங்கள். இன்னும் சிலர், வறுமை, பசி, பிணி, வேலையின்மை போன்ற சமூகக் கொடுமைகளால் பாதிக்கப்பட்டு முறையான வழிமுறைகளைத் தேடாது பொல்லார் கையில் சிக்கி வன்முறைக்கு விலைபோகிறார்கள். இவர்கள் சில இயக்கங்களை அமைத்துக்கொண்டு அமைதியின்றி வாழ்கிறார்கள். 'வன்முறை எதற்கும் தீர்வாகாது' என்பதைக் காலம் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறது.

"ஆங்காரம், கோபம், மோகம், உலோபித்தனம், போசனப்பிரியம், காய்மகாரம், சோம்பல்" பனற தலையானப் பாவங்களே அனைத்துத் தீமைகளுக்கும் வன்முறைகளுக்கும் ஆணிவேர். மேற்குறிப்பிட்ட பாவங்களை மேற்கொள்ள "தாழ்ச்சி, பொறுமை,கற்பு, தாராள குணம், அளவோடு உண்ணல், பிறரன்பு, சுறுசுறுப்பு என்ற நற்பண்புகளை வளர்த்தோமானால், வளர்த்தெடுத்தோமானால் எவ்வகைத் தீமையான வன்முறைகளும் வேரறுக்கப்படும். பழி உணர்வு மாறி மன்னிக்கும் மாண்பு பெருகவேண்டும்.

மனிதர்களாகிய நாம், பலவீனப்பாண்டம் ஆதலால் ஏதாவதொரு வன்முறைக்கு நாளும் அடிமையாகி வருவது ஊன்இயல்பு. தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்களைக் கவர்ந்த இறை இயேசுவின் மலைப் பொழிவு அனைவர்க்கும் நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துமானால் கத்தி இன்றி, இரத்தம் இன்றி 'கடவுள் அரசு' மலர்வது திண்ணம். அப்போது கண்ணீரெல்லாம் துடைக்கப்படும். கானல் நீரும் சோலை வன நீராய் மாறும். அமைதியற்ற மனதில் 'அமைதி' வந்தேறும். இதற்கு மூலம் 'அன்பு'. 'அன்பே கடவுள்' என்றால் அன்பிற்கு ஈடேது 'சொல்'! எனவே, வன்முறை களைவோம்; வீழும் ஆயுதம் ஒழிப்போம். வளமுடன் வாழ்வோம்; வாழ பிறரை அனுமதிப்போம். 'அமைதியான உலகை', பாவமற்ற முதல் உலகை மீண்டு காண்போம். 'கடவுள் நம்பிக்கை' கல்லையும் கரைக்கும். நம்பித் துணிவோம் நல்லுலகு படைக்க இறை அருள்வேண்டி! கடவுள் நம்மோடு என்றும்!

●

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி -168



**ஆகஸ்ட் மாத வெளியீடு. (2017)**

**அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.**

அன்பிற்குரிய விவிலிய போட்டியில் ஒவ்வொரு மாதமும் கலந்துகொள்ளும் வாசகர்களுக்கு, ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள். 26-10-2000 ல் தொடங்கிய விவிலியப்போட்டி கடந்த 18 ஆண்டுகளாக வெற்றிகரமாக இறைவனின் அருளால், இரக்கத்தால் சர்வவியாபி என்ற வார இதழ் வழியாக சீரும் சிறப்புமாக நடைபெற்று வருவதை அனைவரும் அறிவர். இறைவனின் வல்லமையுள்ள வார்த்தை விவிலிய போட்டிகளின் வழியாக இறைவார்த்தையை நீங்களே எடுத்து வாசிக்க ஆவல் கொண்டு விட்டதை எண்ணி மிகவும் பெருமைப் படுகிறேன். அதைவிட மேலாக மிகப்பெரிய பாவியாகிய நான் இறைவன் முன் நிற்க தகுதியற்றவனாயிருந்தாலும், என் வழியாக நீங்கள் அனைவரும் விவிலிய அறிவு பெற்றதை நினைத்து பலரிடம் உங்களைப்பற்றி பெருமையாக பேசி மகிழ்கின்றேன். என்னைவிட மேலாக இயேசு ஆண்டவர் உங்கள் அனைவரையும் நினைத்து மகிழ்ச்சி அடைவார். கடந்த 18 ஆண்டுகள் நீங்கள் அனைவரும் எனக்கு செய்த ஜெப உதவிகள், பண உதவிகள், பொருளாதார உதவிகள் ஏராளம்! ஏராளம்! விவிலிய போட்டியை பற்றி அறிந்து கொண்ட தமிழக ஆயர்கள் ஆசியுரை வழங்கியிருப்பது நீங்கள் கண்ட உண்மை. கடந்த ஆண்டுகளில் சிறப்பான முறையில் ஒவ்வொரு மாதமும் விவிலியபோட்டியை வெளியிட்டு விவிலிய வாசகர்களாகிய உங்கள் அனைவரையும் உற்சாகப்படுத்தி வந்த புதுவை-கடலூர் மறைமாவட்ட பேராயர் அந்தோணி ஆனந்தராயர் ஆயருக்கும், அருட்திரு. D.ஜான் துரைசாமி, அருட்திரு. S. மரிய ஜோசுப், அருட்திரு. C.அந்தோனி ரோச் அவர்களுக்கும் ஜெபம் நிறைந்த வாழ்த்துக்களை, நன்றியினை காணிக்கையாக்குவோம். இறைவன் நம் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இறைஊழியன் அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ்**

**குறிப்பு**9 1) பதில்களை 10.09.2017 க்குள் அனுப்பி வைக்கவும். 2) ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. 3) பதிலை அதிகாரம், வசனத்துடன், சரியான முகவரியுடன் எழுதவும். 4) குலுக்கல் முறையில் முதல் 10 நபர்களுக்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்படும். 5) பதில்களை இன்லேண்ட் (உள்நாட்டு) கடிதத்தில் (அ) ஐந்துரூபாய் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் மட்டுமே எழுதி❖குறியிட்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக்கொள்கிறேன். 6)அல்லதுd,l`hk9 rnnr`hl`qh`q`idmc`m ?fl`hk-bnlஎன்றமுகவரிக்கும் அனுப்பலாம்.

### சீராக் 27 முதல் 51 முடிய

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | | | |
| | | | 13 | | | | 7 | | |
| | | | 6 | | | | 19 | | |
| | | | | 3 | 8 | | 14 | | 4 |
| 9 | | | | | | 18 | | | |
| | | 10 | | | ■ | | | | |
| | 12 | | 17 | | | | | 11 | 21 |
| 5 | | | | | | | | | |
| | ■ | | | | | 15 | | | |
| | | | 20 | | | | 16 | | |

**இடமிருந்து வலம்:**

1. உழைப்பின் பயனை இழக்கச் .................
2. சலிக்கின்றபோது ................உமி தங்கி விடுகின்றது.
3. அதைத் ...................அவர் குளித்ததால் பயன் என்ன?
6. .................உண்போர் நெடுநாள் வாழ்வர்.
7. ...............க்கு முரணானது தீமை.
9. பட்டறிவால்.................ப் பட்டிருக்கிறேன்.
10. ஓங்கிக் .........................கல்லை வீசிய போது.
8. ....................பலவகைத் தீங்கையும் கற்றுக் கொடுக்கிறது.
16. குருத்துவ உரிமை அவருடைய ................மரபினரையே சேரும்.
17. .................தோழரும் எப்போதும் சந்திக்கத் தக்கவர்கள்.
19. அதை உண்டாக்கினவரைப் ...................
20. பளிச்சிடும்....................போலவும் காணப்பட்டார்.

**வலமிருந்து இடம்:**

3. அதனுடன் சேர்ந்து................
6. ..............தம் வாழ்நாளில் அரியன செய்தார்.
7. மற்ற மனிதர்களை விட .............உடையவன்.
13. இரும்பு வேலையில் ...........இருக்கிறார்கள்.
15. தொடக்க முதல்................இருந்துள்ளேன்.
20. என் ...........ஆழந்த பாதாளத்தின் அண்மையில் இருந்தது.

**மேலிருந்து கீழ்:**

1. பிச்சைக்காக அவர்கள் காத்திருக்கும்படி.............
4. எங்கள்.............உமது தூய்மையைக் காட்டியதுபோல்.
5. ..................க் கூடத்திலும் மக்கள் முன்னும்.
10. அநீதியைக் கைவிடுதல் பாவக்.................க் பலியாகும்.
11. பகைவர்களை நினைவு கூர்ந்து.............அனுப்பினார்.
14. அயல்நாடுகளில்.....................செய்வர்.
18. .................கதிரவன் அனைத்தையும் காண்கின்றான்.
21. ............காலம் வரை என் உள்ளம் ஞானத்தில் இன்புற்றிருந்தது.

**கீழிருந்து மேல்9**

4. கடுமையாய் உழைத்தும் ...........யில் வாழ்கிறார்கள்.
5. மற்றவருக்கு முன் நீ உண்ணத்.............
11. ஞானி .................நிரப்பப்படுவார்.
12. .............படையலையும் ஒப்புக்கொடு.
16. நீர் நிலைகளிலும் ஆற்றங்கரைகளிலும் ............நாணல்.

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**

❖ அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ், தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-168**
தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்
தாராபுரம் – **638 656**, திருப்பூர் –Dt. செல்: **99423 11068**

7–ஆம் பக்கத் தொடர்ச்சி...

மாறாக சிறிய காரியங்களை மிகச் சிறப்பாகச் செய்தவர்களே. 'தன்சாயலாகப் படைத்த' கடவுள் தனது மீட்புப் பணியை இயேசு மூலமாகத் துவக்கியதை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதற்குத் தானே.

"ஏன் நாள் முழுவதும் வீணாகப் பொழுதைக் கழிக்கிறீர்கள்"? என்று கேட்டவருக்கு அவர்கள் அளித்த பதில் என்ன? "எங்களை யாரும் வேலைக்குக் கூப்பிடவில்லையே" என்பதுதானே. திருமுழுக்குப் பெற்ற அனைவருக்கும் நற்செய்திப் பணி புரிந்திட அடையாள அட்டை வழங்கப் பட்டுள்ளது. புறப்படுங்கள் பழைய ஏற்பாட்டுக்கால நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது, ஏசாயா ஆமோஸ் போன்றவர்களைவிட நாம் பேறு பெற்றவர்கள். நாம் தந்தையை அறிவோம், இயேசுவையும் அறிவோம், பரிசுத்த ஆவியான வரையும் அறிவோம்.

இறைமக்கள் எனப்படும் பொதுநிலையினர் மும்பெரும் பணிகளைச் செய்ய அழைக்கப்படுகின்றனர். 1) **குருத்துவப் பணி** பொதுநிலையினர் கடவுளுக்கும் சாதாரண மனிதருக் கும் இடையே இணைப்பாளராகப் பணி செய்வார். தானும் புனிதம் பெற்று பிறரையும் புனிதப்படுத்துவார்; ஒப்புரவு செய்தியை வழங்குவார். விண்ணையும் மண்ணையும் இணைப்பார். கடவுளோடு தனித்தும் மக்களோடு இணைந்தும் இருப்பார். கடவுளின் அருளைப் பெற்றுத் தருவார். 2) **இறை வாக்குப்பணி** கடவுளின் வார்த்தையை துணிவுடன் கூறுபவர் இறைவாக்கினர், பரிசுத்த ஆவியின் வல்லமையால் கடவுளின் திட்டத்தை அறிந்து மக்களிடம் துணிச்சலோடு எடுத்துச் செல்வார். தன்னை முன்னிலைப் படுத்தாமல் கிறிஸ்துவை முன்னிலைப் படுத்திச் சொல்லுதல். போலி இறை வாக்கினர்களும் இருப்பார்கள். அவர்களை அடையாளம் காணவேண்டும். "தன் புகழ்பாடி பெருமையடித்து பைபிள் வார்த்தைகளை தனக்குச் சாதகமாக எடுத்துக்கூறி தன்னை மையப்படுத்தி 'நான்' 'தான்' என்று பேசுபவர்களே போலி இறைவாக்கினர்கள். 3) **அரசுப் பணி** கிறிஸ்துவை பின்பற்றும் ஒருவன் தன்னையே தாழ்த்தி பொதுப்பணி செய்ய முன்வர வேண்டும். வாழும் சமுதாயத்தில் அவர் ஒளியாகவும் உப்பாகவும் இருந்து கிறிஸ்து அரசுப் பணி செய்வது முக்கியம். இந்தப் பணி இறைமக்களாகிய நமக்கும், குருக்கள், துறவிகள், ஆயர்கள் மற்றும் திருத்தந்தைக்கும் பொருந்தும். ஏனெனில் நாமே திருச்சபை நாமே அதனைக் கண்காணிக்க வேண்டும். ●

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-161
## பிப்ரவரி மாத (2016) போட்டியின் முடிவுகள்

**விவிலிய பகுதி: தானியேல் முதல் ஒசேயா வரை**

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் 10 பேர்.**

1. N.P. ஆரோக்கியமேரி பீட்டர்-C.நம்மியந்தல், 2. Sr. சின்னராணி-அனிலாடி, 3. Sr. அமலி அண்டோலின் சுகந்தி H.M.-வீரகலூர், 4. L. ஜேம்ஸ் - மங்கலம்பேட்டை, 5. S. ஆனி சுசாந்த் சாந்தி-புதுவை, 6. Sr. செசீலியா-வாலகிரி, 7. C. கஸ்பார் Rtd.H.M.-இளையாங்கண்ணி, 8.M.மதலை இருதயமேரி-மேட்டூர் அணை, 9. Sr. ஆரோன் மரியசூசை - கரையாம்புதூர், 10. ஞானம் சவரிராஜ் - பெரியவர் சீலி.

**சரியான பதில்கள்:**

| **இடமிருந்து வலம்** | | **வலமிருந்து இடம்** | |
|---|---|---|---|
| 1. கல்தேய | 1:4தா | 1.கனவுகளையும் | 1:17தா |
| 3. கடவுளை | 2:19தா | 5.ஆட்சியுரிமை | 4:3தா |
| 4. எடையில் | 5:27தா | 7.எல்லா | 2:12தா |
| 6. கருணை | 1:7ஓ | 13.காத்திருந்து | 6:9ஓ |
| 7. எழுந்து | 6:19தா | 15.எழுந்து | 12:13தா |
| 9. தொன்மை | 7:9தா | 16.பூட்ட | 11:7ஓ |
| 10. பெரும் | 9:26தா | 18.அரசனின் | 8:27தா |
| 14. பாகாலை | 7:16ஓ | 22.வரும் | 12:6ஓ |
| 19. அரசாளும் | 11:5ஓ | **கீழிருந்து மேல்** | |
| 21. எல்லா | 3:5தா | 4.எரியும் | 3:21தா |
| 12. ஆணை | 9:26தா | 7.எரிகின்றது | 7:6ஓ |
| **மேலிருந்து கீழ்** | | 8.வந்து | 10:10ஓ |
| 2. சொல்லும் | 2:4தா | 9.தொடைகளும் | 2:32தா |
| 5. ஆளுநராக | 2:48தா | 11.அளவுள்ள | 3:3ஓ |
| 7. எத்துணை | 4:3தா | 17.கண்ட | 2:19தா |
| 12. ஆராம் | 12:12ஓ | | |
| 20. போது | 11:1ஓ | | |

**பாராட்டும், இறை ஆசீரும் பெறுபவர்கள்:** S. சவரிமுத்துRtd.M.T., A. செல்வராயர் சாந்தா–தெற்குச் சாத்திப்பட்டு, Sr. ஜசிந்த்–சாந்தோம், S.கமலம், P.கிரேஸி ராபின்–திருச்சி, J.சூசன்னா பால்–தூத்துக்குடி, C.குப்புச் சவரி Rtd.H.M. – V.பாஞ்சாலம், S.L. மரியதாஸ், L. ஜான்மேரி ஜெரோம், J.பெரியநாயகமேரி, நிர்மலா-நெய்வேலி, S.ஹென்றிதாஸ்–வடக்குத்து, Sr.மரியபுஷ்பம்–புறத்தாக்குடி, R. உத்திரியமேரி Rtd.Tr–வடக்கு செய்யூர், C. பவுலீன் சூசைநாதன் –மதுராந்தகம், சகாயமேரி ஆனந்த், D. உபகாரமேரி, S. ஆனி சுசான் சாந்தி, ஷீலா விக்டர்–புதுவை. இ.இருதயமேரி, R.மிக்கேல்சாமி Rtd.Tr – இராமநாதபுரம், ரெஜினாராபின்–வெலிங்டன், Sr. அமலி அன்டோலின் சுகந்தி, Sr.ரெஜினாமேரி–வெலிங்டன், Sr. செசிலி-திண்டுக்கல், Sr.ஆக்னஸ்–M.அம்மாபட்டி, A.அருமைராஜ் – காந்திகிராமம், A. ரோஸ்மேரி, A. விக்டர்ரவி, J.சகாயசெல்வி, L. ஜேம்ஸ், A.மோட்சராக்கினி, S.பெர்க்மான்ஸ்மேரி, மேரி கபிரியேல்,A. ஸ்டெல்லாமேரி, S.விரோணிக்கா – மங்கலம்பேட்டை, P.எலிசபெத் பீட்டர்-மன்னார்குடி, டல்சி D.குருஸ், P.ஜோதி அல்போன்சா–போத்தனூர், Sr.அமலோற்பவ மேரி, Sr. நெரீனாமேரி, Sr. எப்போனாமேரி–அரியாங்குப்பம், Sr. செசீலியா–வாலகிரி, A.அல்போன்சாமேரி Rtd. Tr, S.சந்தியாகு Rtd.H.M., A. அமல்ராஜ்–நாரணம் பாளையம், – S.G.ஜோசப் ராஜமாணிக்கம்–மதுரை, கர்மேல்மேரி ஜார்ஜ்–மூலகுளம், P.விஜயக்குமார்-பாக்குமுடையான்பட்டு, S. மேரி ரொசாலி–அத்திப்பாளையம் பிரிவு, A.லில்லி அருள்தாஸ், லொயலா திவ்யநாதன், S. புஷ்பமேரி Rtd.Tr, A.C.பிலோமினா அகஸ்டஸ்–கடலூர், J. ஜான்பீட்டர் மலையப்பா–வன்னியர் பாளையம், Sr.குழந்தை–ஆடையூர், Sr.காசியான் மேரி – வேட்டவலம், Sr.லாரன்ஸ் செல்வநாதன், Sr.செலின் இராயப்பன், Sr.யூப்ரேசியா–திண்டிவனம், S. தனசீலி, A. மரியப்பன் Rtd.Tr–விரியூர், A. ஜோசப் அருள் சவரிநாதன், J. நோயல் அருள்தாஸ்–திருவாக்கவுண்டனூர், A. மரிய கிறிஸ்துராஜ், A. உபகாரசாமி Rtd.Tr, R. லூக்காஸ், L.லிட்டில் ப்ளவர்–விழுப்புரம், A.லில்லி ஜாக்குலின்,S.ஸ்டெல்லா, A.R.தாமஸ்–கீழ்ப்பெரும்பாக்கம், D. பேபி அடைக்கலமேரி–திருமயம், Sr.சிறிய புஷ்பம்–மேர்நாரியப்பனூர், J.ஸ்டெல்லா வின்சென்ட்–துடியலூர், Sr.மௌரீன்மேரி, S.ரோசாலிமேரி Rtd.Tr – R.அமல்ராஜ்–வடலூர், Sr. கிரகோரிமேரி, Sr. ஜோவித்தாமேரி–புதுப்பாளையம், Sr. மேரிபுஷ்பம் – கடலூர், B. மரி தெரேஸ், ஜோஸ்பின் வர்க்கீஸ்–ரெட்டியார்பாளையம், M.சின்னப்பன்–உழவர்கரை, J. ரெபேக்காள் அன்னபாக்கியம் ஜெயராஜ்–முத்தையாபுரம், Sr. மேரி ஸ்டெல்லா, Sr. மேரி கபிரியேல்–கும்பகோணம், Sr.மேரி பவுலீன்–காத்தான்பள்ளம், A. சிங்கராயன்–பாளையங்கோட்டை, S.பால்ராஜ்–மேட்டுப் பாளையம், D. ஜெனட் வின்சென்ட்–மறவன் குடியிருப்பு, P.மரிய சகாய செபஸ்டின்–போளூர், Sr.ஜூலியானா, Sr. பெஞ்சமின், Sr. ஜூலி எலிசபெத்–மாதாக்கோட்டை, A. யூஜீன் அமித்தா–தஞ்சாவூர், Sr.செலீன், Sr.சின்னராணி – அனிலாடி, M. ஜெயராஜ் –பசுபதிபாளையம், P.டோரத்தி, A. ஸ்டெல்லா ராணி Tr, செல்வராயன் மரிசெலீன், G. அந்தோனி Rtd.Tr, W. லியோனி, M.லாரன்ஸ், A. சசீலாராஜ், S. ஆரோக்கியமேரி, R.ஹெலன், D. ஜோசப் பீட்டர்–நெல்லித்தோப்பு. – தொடரும்...

## விண்ணக வாழ்வின் ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்: 15-06-1951



விண்ணில்: 11-08-2011

தெய்வதிரு **R.அந்தோணி** M.A.,M.Ed.,
(Rtd.HM./ R.C.School, *முன்னூர்*)

**கடவுளுக்கும் மனிதருக்கும் பிரியமானவர்.**

திவ்விய யேசுவே, ஆத்மாக்களை இரட்சிக்கும் ஆண்டவரே, எங்கள் அனைவரின் அன்புக்கு பாத்திரமாக எங்கள் மத்தியில் வாழ்ந்து உம்மால் அன்புடன் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்று உமது திருவடி நிழலில் வாழும் அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப் பாற்றியையும், முடிவில்லாத பிரகாசத்தையும் அளித்தருளும் ஆமென்.

**பிரிவால் துயருறும்**
**மனைவி: L.ஜெபமாலை மேரி**
**மகன்கள், மகள்கள், மருமகன், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்**
**திண்டிவனம்.**

## விண்ணக வாழ்வின் 10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 03-02-1965



மறைவு: 05-08-2007

## திரு. L.அந்தோணிராஜ்

"ஜீவியத்தில் உம்மை நேசித்தோம்
மரணத்திலும் உம்மை மறவோம்"

**புதுவை ரெயின்போ நகர், புனித ஜான் மரிய வியான்னி ஆலயத்தில் 5-8-2017 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

**பிரிவால் துயருறும்**
**தாய், தந்தை, மனைவி,**
**மகள்கள், சகோதரர்,**
**குடும்பத்தினர்கள்**
**மற்றும் உறவினர்கள்.**
புதுவை.

## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம்: 20-03-1924



மறைவு: 07-07-2017

## திருமதி. புளோரா சேன்ராக்

"ஜீவியத்தில் உம்மை நேசித்தோம்
மரணத்திலும் உம்மை மறவோம்"

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 6-8-2017 ஞாயிறு காலை 7.30 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.**

**பிரிவால் துயருறும்**
**மகன், மகள்கள், மருமகன்கள்,**
**மற்றும் பேரப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்கள்.**
முத்தியால்பேட்டை.

**மூடர்கள் கூட்டத்தில் அதன் தலைவன் முழக்கம் செய்வதைக் கேட்பதைவிட, ஞானமுள்ளவர் அடக்கமுடன் கூறுவதை கேட்பதே நன்று. ( ச.உ. 9:17)**

## விண்ணக வாழ்வின் 48-ஆம் ஆண்டு அஞ்சலி

தோற்றம் மண்ணில்: 08-02-1910



தோற்றம் விண்ணில்: 10-08-1969

எமை விட்டுச் சென்றாலும்
எம்முடன் ஒளியாய் வாழ்பவரே!
என்றும் எம்மைக் காப்பீரே!
எல்லையில்லா இன்பமுடன்
இறைவனில் நீர் இளைப்பாற
காணிக்கையாக்கி அளிக்கின்றோம்
என்றென்றும் எம் ஜெபங்களையே!

### அருமைநாதன் துய்க்லோ

*C/Chef* ***AROUMENADIN DUCLOS***

*(Medaille Militaire)*

**மண்ணக வாழ்விலே நேசித்த உம்மை**
**விண்ணக வாழ்விலும் மறவோமே!**

பிரிவால் துயருறும்
மனைவி: **அன்னம்மாள் துய்க்லோ**
**பிள்ளைகள் - மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**
புதுவை.

திருப்பலி:

13–8–2017 புதுவை, புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயம் – காலை 8.00 மணி

13–08–2017 புதுவை, திரு இதய ஆண்டவர் பசிலிக்கா– காலை 7.30 மணி

15–8–2017 ரெட்டியார்பாளையம், புனித அந்தோணியார் ஆலயம், மாலை 6.00 மணி

---

## விண்ணக வாழ்வின் நான்காம் ஆண்டு அஞ்சலி



இயேசுவைப் போல் தன்னுயிர் ஈந்து
தன் குழந்தைக்கு உயிர்கொடுத்த
**தியாகத் தாயே,**
அர்ப்பண உணர்வோடு கல்விப்
பணியை பொறுப்புடனும் மகிழ்வுடனும்
செய்த
**நல் ஆசிரியையே,**
குடும்பத்தார் மற்றும் அறிந்தவர்
அனைவராலும் நேசிக்கப்பட்ட
**அன்பு மகளே,**
என்றும் இறைவனின் அமைதியில்
வாழ இறைவனை வேண்டுகிறோம்.

### திருமதி.ம.மேரி பிளாரன்ஸ்,

ஆசிரியை

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19-04-1976 | 08-08-2013 |

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே" – யோவான்.11:25

நாள்: 08–08–2017 (செவ்வாய்க் கிழமை)
நேரம்: மாலை 6.00 மணி
இடம்:புனித விண்ணேற்பு அன்னை ஆலயம், மேட்டூர் அணை–1, சேலம் மாவட்டம்.

2/7, ஆஸ்பத்திரி காலனி, மேட்டூர்.
இப்படிக்கு
என்றும் உம் அன்பில் வாழும்
கணவர்: A. ரொசாரியோ
பிள்ளைகள்:R.சான்சியா,R. மெர்வின்
பெற்றோர், உடன் பிறந்தோர்
மற்றும் உறவினர்கள்.
மேட்டூர். (சேலம்)

---

## விண்ணக வாழ்வின் 9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 20-11-1936



இறப்பு: 06-08-2008

### திரு. மார்சியால் பெலிக்ஸ்

"உமது மீட்பால் வரும் மகிழ்வை எனக்கருளும்" (சங்.50:12).

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 6-8-2017 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை புனித ஜெப மாலை அன்னை ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்

பிரிவால் துயருறும்
மனைவி: அதேல் ஆஞ்சலின்
மகன்கள், மகள்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உறவினர்.
முத்தியால்பேட்டை.

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய அமைதியில் இளைப்பாறுவார்களாக.**

✦ **மகனிடம் மன்னிப்பு கேட்ட தாய்:** "மகனே, உன்னை எங்களால் காப்பாற்ற இயலவில்லை. இதற்காக நானும், உன் அப்பாவும் மிகவும் மனம் வருந்துகின்றோம். வேதனைப்படுகின்றோம், உன்னிடம் மன்னிப்புக் கேட்கின்றோம். மகனே, உனது உறுப்புகள் செயலிழக்கத் தொடங்கிய நேரம் முதல், உன்னைக் காப்பாற்றுவதற்கு, எவ்வளவு முயற்சிகள் எடுக்க முடியுமோ அவ்வளவு முயற்சிகளையும், ஏறக்குறைய கடந்த 12 மாதங்களாக, எடுத்தோம். எல்லா முயற்சிகளுமே, மோசமாகவே எங்கள் வாழ்வில் நடந்தன. ஆனால், மகனே நீ எப்போதும் எங்களுக்கு மகனே. எங்களின் அழகான குட்டி மகன் இவ்வுலகைவிட்டுப் போகட்டும் எனச் சொல்வதைப் போன்ற கடினமான காரியம் வேறு எதுவும் இல்லை. நாங்கள் சொல்ல வேண்டிய மிக கடினமான கூற்று இது". இவ்வாறு, தன் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு, பிரித்தானிய தாய் ஒருவர், அறிக்கை ஒன்றை, இவ்வாரத்தில் வெளியிட்டுள்ளார். இலண்டனில், பிறக்கும்போதே மரபணு குறைபாட்டுடன் பிறந்துள்ள 11 மாதக் குழந்தை சார்லி கார்டுக்கு (Charlie Gard), சிகிச்சைகள் வழங்கும் மருத்துவர்கள், தொடர்ந்து சிகிச்சையளிப்பது பலனற்றது எனக் கைவிரித்துவிட்டனர். இந்நிலையில், ஒரு மூன்று மாதம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பரிசோதனை முறையில் சிகிச்சையளிக்க பெற்றோர் விரும்பினர். ஆனால் பிரித்தானிய நாட்டு நரம்பியல் நிபுணர் ஒருவரும், குழந்தை சார்லிக்கு, பரிசோதனை முறையில் சிகிச்சையளிப்பது எவ்விதத்திலும் பயன்தராது என அறிவித்துவிட்டார். இந்நிலையில் சார்லியின் பெற்றோர் (Chris Gard 32, Connie Yates 31), சட்டமுறைப்படி தாங்கள் எடுத்துவந்த நடவடிக்கையை, நிறுத்திக்கொள்வதாக இத்திங்களன்று அறிவித்தனர். அதன்பின் சார்லியின் அம்மா, தன் அன்பு மகனுக்குச் சொல்வதாக விடுத்த அறிக்கையில், தங்களின் இந்த முடிவுக்காக, மகனிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உட்பட, உலகின் பல இடங்களிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள், சார்லியின் பெற்றோருக்கு ஆதரவாக இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. -வத்.வானொலி.

✦ **திருத்தந்தையின் 5ம் ஆண்டு தலைமைப் பணி நினைவுப் பதக்கம்:** திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆற்றிவரும் தலைமைப் பணியின் 5ம் ஆண்டை நினைவுகூரும் வகையில், வத்திக்கான் வடிவமைத்துள்ள பதக்கம் ஒன்று, ஜூலை 28 இவ்வெள்ளியன்று வெளியாகிறது. தங்கம், வெள்ளி, வெண்கலம் என்ற மூன்று உலோகங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பதக்கங்கள், வத்திக்கானின் அனைத்து நூலகங்கள், மற்றும் நினைவுப் பொருள் மையங்களில் கிடைக்கும் என்று வத்திக்கான் செய்தித் தொடர்பகம் அறிவித்துள்ளது. மரியாஞ்செலா கிரிஷோட்டி (Mariangela Crisciotti) என்ற கலைஞரால் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பதக்கத்தின் ஒரு புறம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் தலைமைப் பணிக்கென தெரிவு செய்த இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. இப்பதக்கத்தின் மறுபுறம், ஒரு மனிதர் தன் கரங்களை நீட்டி, மற்றொருவருக்கு உதவுவதுபோலும் அவருக்கு அருகே ஒரு பெண், குழந்தை ஒன்றை ஏந்தியிருப்பதுபோலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. உதவி பெறும் மனிதர் இயேசுவின் சாயலில் இருப்பது போல் உருவாக்கப்பட்டுள்ள இவ்வடிவத்தின் பின்னணியில், படகு ஒன்றில், "அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக்கொண்டீர்கள்" (மத்.25:35) என்ற வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆபத்தான கடல் பயணங்களை மேற்கொள்ளும் புலம்பெயர்ந்தோரைக் குறிக்கும் வண்ணம் இந்தப் பதக்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பதக்கங்கள், 50 தங்கத்திலும், 1000 வெள்ளியிலும், 1500 வெண்கலத்திலும் வெளியாகின்றன என்று ZENIT கத்தோலிக்கச் செய்திக் குறிப்பொன்று கூறியுள்ளது. - ZENIT

✦ **மெக்சிகோ ஆயர் பேரவை அலுவலகத்திற்கு முன் குண்டுவெடிப்பு:** ஜூலை 25, கடந்த செவ்வாயன்று, மெக்சிகோ ஆயர் பேரவையின் தலைமை அலுவலகத்திற்கு முன் நிகழ்ந்த குண்டு வெடிப்பு, கத்தோலிக்கத் திருஅவை மீது நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல என்று, அந்நாட்டு ஆயர்கள் கூறியுள்ளனர். மெக்சிகோ மாநகரில் அமைந்துள்ள புகழ்பெற்ற குவாதலூப்பே அன்னை மரியா பசிலிக்காவுக்கு அருகே உள்ள மெக்சிகோ ஆயர் பேரவையின் தலைமை அலுவகத்திற்கு முன், செவ்வாய் அதிகாலை, 1.50 மணிக்கு நிகழ்ந்த குண்டுவெடிப்பினால் யாருக்கும் எந்த பாதிப்பும் நிகழவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இந்த குண்டுவெடிப்பு கத்தோலிக்கத் திருஅவைக்கு எதிரான தாக்குதல் இல்லையெனினும் மெக்சிகோ நாட்டில் மிகப் பரவலாக நிலவும் வன்முறை கலாச்சாரத்தை இந்நிகழ்வு மீண்டும் நம் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது என்று, ஆயர் பேரவையின் செயலர், ஆயர் Alfonso Miranda Guoardiola அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார். உயிர்களை மதிக்கும் பண்பையும், அமைதியையும் அனைத்து மக்களும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று, கத்தோலிக்க ஆயர்கள் என்ற முறையில், இத்தருணத்தில் வேண்டுகோள் விடுக்கிறோம் என்று, மெக்சிகோ ஆயர்கள் கூறியுள் ளனர். மெக்சிகோ நாட்டில் கடந்த 20 ஆண்டுகளாக இல்லாத அளவு,கடந்த ஜூன் மாதம் மட்டும், 2234 கொலைகள் நிகழ்ந்துள்ளன என்று, CNS கத்தோலிக்கச் செய்தி கூறுகிறது.

**வில்லியனூர் மாதா குளத்தில் புனித தீர்த்தம் ஊற்றும் விழா:** பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரின் அற்புத சுனையிலிருந்து கொண்டுவரப்படும் புனித நீரானது, வில்லியனூர் மாதா குளத்தில் ஊற்றும் விழா, வேலூர் மறைமாவட்ட ஆயர் மேதகு டாக்டர் சௌந்தர்ராஜ் அவர்களின் தலைமையில் ஆகஸ்ட் மாதம் 5-ம் தேதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெற உள்ளது. புதுவை வில்லியனூரில் அமைந்துள்ள தூய லூர்து அன்னை ஆலயம் சுமார் 140 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டதாகும். தமிழர் பண்பாட்டின்படி ஆலயத்திற்கு முன் குளம் அமைந்திருப்பது இதன் தனிச் சிறப்பாகும். இயற்கையாக அமைந்துள்ள இந்த மாதா குளத்தின் கரைகள் 1924ம் ஆண்டு கட்டப்பட்டதாகும். பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் மாதா பெர்னதத் என்ற சிறுமிக்கு காட்சிகொடுத்த இடத்தில் உள்ள அற்புத சுனையிலிருந்து கொண்டுவரப்படும் புனித நீரானது, வில்லியனூர் மாதா குளத்தில் ஆண்டுதோறும் கலக்கப்பட்டு வருகின்றது.இந்த புனித நீரை பயன்படுத்தும் பக்தர்கள் பலவிதமான நோய்களிலிருந்து விடுபட்டு வருகின்றனர். இத்தகைய புதுமை நிறைந்த மாதா குளத்தில் பிரான்ஸ் நாட்டிலிருந்து கொண்டுவரப்படும் புனித தீர்த்தம் இந்த ஆண்டும் கலக்கப்பட உள்ளது. இதனையொட்டி வில்லியனூர் மாதா திருத்தலத்தில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற உள்ளன. சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு முதல் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து மாதா குளத்தை சுற்றி சிறிய தேர்பவனியும் நடைபெற உள்ளன. காலை 6.45 மற்றும் 11.30 மணிக்கும் சிறப்பு திருப்பலிகள் நடைபெற உள்ளன. தொடர்ந்து மாலை 6 மணிக்கு, வேலூர் மறைமாவட்ட ஆயர் மேதகு டாக்டர் சௌந்தர்ராஜ் அவர்களின் தலைமையில் சிறப்பு கூட்டுத் திருப்பலியும், பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரின் அற்புத சுனையிலிருந்து கொண்டுவரப்படும் புனித நீரானது வில்லியனூர் மாதா குளத்தில் ஊற்றும் நிகழ்வும் நடைபெற உள்ளன. தொடர்ந்து இரவு 7.30 மணியளவில் மாதாவின் ஆடம்பர தேர் பவனி வீதிகளில் நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பங்குத்தந்தை பிச்சைமுத்து தலைமையில் பங்குப் பேரவை, இளைஞர்கள் மற்றும் பங்கு மக்கள் செய்து வருகின்றனர். அனைவரும் வருகைபுரிந்து பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு: அருட்திரு. S.பிச்சைமுத்து, திருத்தல அதிபர்

அருட்திரு. J.ஆண்ரூஸ் , உதவி தந்தை வில்லியனூர்.

***Printed and Published*** **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore,
by Rev. Fr. **C.ANTONI ROCHE**, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.